பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 22 செவ்வாய்க்கிழமை (05.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 71

### தற்போதைய அரசமைப்புக்கு உட்பட்ட

# மாகாண நிர்வாக முறைமையே நடைமுறைச் சாத்தியமான தீர்வு!

### சுதந்திர தின உரையில் ஜனாதிபதி அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 05

“நாம் வழங்குகின்ற தீர்வு இந்த நாட்டிலே செயற்படுத்தக் கூடிய ஒரு தீர்வாக இருக்கவேண்டும். பரீட்சார்த்தமான தீர்வுகளை நாம் வழங்க முடியாது. இரத்தம் சிந்தி, ஆயிரக்கணக்கானோரை இழந்திருக்கும் போது தீர்வுகளைப் பரீட்சார்த்தமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால்தான் இந்த நாட்டில் செயற்படுத்தக்கூடிய - எமக்கு அனுபவங்களைத்தந்த - தீர்வு ஒன்றை நாம் தெரிவு செய்தோம். எமது அரசமைப்பு ஊடாக மாகாண நிர்வாகத்தை மக்களிடம் நெருங்க வைப்பதே அந்த நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும்.”

- இவ்வாறு நேற்று தமது சுதந்திர தினச் செய்தியில் பகிரங்க மாக அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் அறுபதாவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் சுதந்திர தினத்தை ஒட்டி நேற்றுக்காலை கொழும்பு, காலி முகத்திடலில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில் தலைமை வகித்து, நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தியபோதே ஜனாதிபதி இவ்வாறு அறிவித்தார்.

வடக்கில் வாழ்கின்ற மக்களுக்கு அரசியல் தீர்வையும், அரசியல் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுப்போம் என்று அந்த உரையில் குறிப்பிட்ட ஜனாதிபதி, 'தாங்கள் அதற்காகத் தெரிவு செய்துள்ள தீர்வு குறித்தும் பிரஸ்தாபித்தார். தற்போதைய அரசமைப்பு ஊடாக மாகாண நிர்வாகத்தை மக்களிடம் நெருங்க வைப்பதே அந்த நடைமுறைச் சாத்தியமான தீர்வு என்றும் அவர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின் மூலம் -

தற்போதைய அரசமைப்பை மாற்றாமல், அதன் கீழ் மாகாண அதிகாரங்களைப்பகிர்வதே தமது முடிவு என்பதை அவர் தெளிவாகக் கோடி காட்டினார்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

## படை வலிமையைப் பறைசாற்றும் சுதந்திரதின அணிவகுப்பு நேற்று

கொழும்பு, பெப். 05

இலங்கையின் சுதந்திர தினத்தின் 60 ஆவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டிய கோலாகல நிகழ்வுகள் நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்றன.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், உயரதிகாரிகள் என உயர் குழாமினர் இதில் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின நிகழ்வை ஒட்டிய படையினரின் அணி வகுப்பு பெரும் எடுப்பில் இடம்பெற்றது. கனரக ஆயுதங்கள் சகிதம் படையினரின் வலிமையைப் பறைசாற்றும் விதத்தில் இந்தப் பேரணியில் முப்படையினரும் பொலிஸாரும் அணிவகுத்துச் சென்றனர்.

தேசிய கீதத்துடன் ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றியதைத் தொடர்ந்து சுதந்திர தின வைபவங்கள் ஆரம்பமாகின.

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க இதுவரை உயிர்நீத்த அத்தனை பேருக்கும் அங்கு இரண்டு நிமிடங்கள் மௌனஅஞ்சலியும் செலுத்தப்பட்டது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - கொழும்புக்கு நேரடி பஸ்சேவை பாதிப்பு

வவுனியா மற்றும் மன்னாரில் இருந்து கொழும்புக்கு செல்லும் பஸ் போக்குவரத்துக்கான தடை உத்தரவு மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியாவிலிருந்து வாகனங்கள் எதுவும் நேரடியாக மதவாச்சி சோதனைச் சாவடியைக் கடந்து செல்வதற்கு அனுமதி இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வவுனியாவில் இருந் செல்லும் பயணிகள் பஸ்கள் யாவும் மதவாச்சி சோதனைச் சாவடியுடன் நிறுத்தப்பட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நேற்றுத் தேசியக் கொடிகள் பறந்தன

### மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவு

யாழ்ப்பாணம்,பெப்.05

இலங்கையின் 60 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டி நேற்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் தேசியக்கொடியான சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற சுதந்திர தின வைபவத்தில் யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இந்த வைபவத்தில் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள் ஆகியவற்றுக்கு முன்பாகவும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களிலும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பிரதான இராணுவ முகாம்கள், காவல் நிலையங்கள், சோதனைச் சாவடிகள் ஆகியனவும் தேசியக் கொடிகளால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 5 இராணுவத்தினர், 2 பெண்கள் உட்பட 13 பேர் மணலாறு கிளைமோரில் பலி!

### 17 பேர் காயம்; பயணிகள் பஸ் மீது தாக்குதல்

கொழும்பு,பெப்.05

மணலாறு (வெலி ஓயா) பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் பயணிகள் பஸ் ஒன்று மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரில் சிக்கியதில் ஐந்து இராணுவத்தினர், இரு பெண்கள் உட்பட பதின்மூன்றுபேர் உயிரிழந்தனர்; 17 பேர் படுகாயமடைந்தனர்.

பராக்கிரமபுரவுக்கும் ஜானகபுரவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றே தெட்டுநுவவெவுக்கு அப்பால், கொப்பேகடுவ சந்திக்குச் சமீபமாக இவ்வாறு கிளைமோருக்கு இலக்கானது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அஞ்சப்படுகிறது.

படுகாயமடைந்தவர்களில் எண்மர் நேற்றுமாலை அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

முதலில் பதவியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 17 பேரில் மிக மோசமான கட்டத்தில் இருந்த அறுவரே அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்றும், அவர்களில் இருவர் சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மன்னார் நகரத்தில் ஷெல் வீச்சு; சுற்றிவளைப்பு

மன்னார், பெப்.05

மன்னார்,பஸ் தரிப்பிடப் பகுதி, மூர் வீதி மற்றும் பெரிய கடை ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை முதல் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய சுதந்திர தின பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், இதில் குறித்த பகுதிகளில் சென்ற அனைத்துப் போக்குவரத்து வாகனங்களும் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தலவில் நேற்றுப்பிற்பகல் கிளைமோர்த் தாக்குதல்

கொழும்பு,பெப்.05

மொனறாகலை மாவட்டம், புத்தல, கதிர்காமம் வீதியில் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினர் பயணித்த 'ட்ரக்' ஒன்றை இலக்குவைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 3 படையினர் காயமடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவத்தில் காயமடைந்த படையினர் உடனடியாக கதிர்காமம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தென்னிலங்கையின் மொனறாகலை மாவட்டத்தில் அண்மைக் காலமாகப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் எதிரான தாக்குதல் திடீர் திடீரென இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# 2,280 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு,பெப்.05

நேற்று இடம்பெற்ற இலங்கையின் சுதந்திரதினத்தையொட்டி சிறிய குற்றங்களுக்காக சிறைவாசம் அனுபவித்துவந்த 2 ஆயிரத்து 280 பேர் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் அல்லது அவர்களது சிறைவாசம் குறைக்கப்பட்டது என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# அதிரடிப்படையின் முகாம்கள் மீது அம்பாறையில் அதிகாலைத் தாக்குதல்

கொழும்பு,பெப்.05

அம்பாறை, வக்கிமுட்டியாப் பகுதியிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் இரு மினிமுகாம்கள் மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தாங்கள் தாக்குதல் நடத்தி, அந்த முகாம்களை முற்றாக அழித்திருக்கின்றார்கள் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தருக்கின்றனர்.

காலை 6 மணிவரை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது செறிவான மோட்டார் ஷெல்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், பின்னர் அந்த முகாம்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் தாங்கள் கொண்டுவந்தனர் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (சி)

# தலைநகரப் பாடசாலைகள் திங்கள் வரை மூடப்பட்டிருக்கும்

கொழும்பு,பெப்.05

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட அரச மற்றும் தனியார் பாடசாலைகளை இன்றிலிருந்து அடுத்த வாரம் திங்கட்கிழமை வரை தற்காலிகமாக மூடிவிட கல்வி அமைச்சு தீர்மானமெடுத்திருக்கின்றது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற் கொண்டே இத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட அரச மற்றும் தனியார் பாடசாலைகள் அனைத்திற்கும் முன்கூட்டியே அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரம் திங்கட்கிழமை 11ஆம் திகதி முதல் இப்பாடசாலைகள் வழமைபோல் இயங்கும் என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (சி)


**இதோ!**

**சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

**தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல, சுவாசநாளங்களில் உண்டாகும்சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆதியநோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புததேசிய ஔஷதம்.**

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

*யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382)AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
*இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்) (கி/54168)


## மரண அறிவித்தல்

### சின்னையா பாறிப்பிள்ளை (செல்லம்மா)

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் புலோலி தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பாறிப்பிள்ளை நேற்று (04.02.2008) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் தம்பையா சின்னையாவின் பாசமிகு மனைவியும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, இராசேஸ்வரி, பேரின்பமலர், யோகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி, சுப்பிரமணியம், அம்பிகாவதி, தர்மலிங்கம், செல்வராசா, நாகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தென்மேற்கு,*
*புலோலி, பருத்தித்துறை.*

தகவல்:
பிள்ளைகள்.

# கல்கிஸையில் மின்மாற்றிக்கு குண்டுவைப்பு

கொழும்பு,பெப்.05

கொழும்பு, கல்கிஸையிலுள்ள மின்மாற்றி ஒன்று நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களினால் வெடிபொருள்களைப் பயன்படுத்தி சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு சுமார் 200 கிராம் அளவுடைய வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், இந்த வெடிப்புச் சம்பவத்தினால் மின்மாற்றிக்கு அருகில் இருந்த நான்கு வீடுகளுக்கு சிறிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மின்மாற்றிக்கு ஏற்பட்ட சேதத்தினால் சுமார் 30 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்திருக்கிறது. சம்பவம் தொடர்பில் கல்கிஸைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (சி)

# குப்பை மேட்டில் குண்டுவெடிப்பு

கொழும்பு,பெப்.05

மொறட்டுவ, கங்கணிவத்தையிலுள்ள குப்பைமேடு ஒன்றில் கிடந்த குண்டு ஒன்று நேற்று முற்பகல் வெடித்ததில் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும், சம்பவத்தில் பிற சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. (சி)

## படை வலிமையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்ததாக கடலை நோக்கி 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்குத் தனது சுதந்திரதின உரையை நிகழ்த்தினார்.

இறுதியாக முப்படையினர், புதிதாக அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோரினது அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

அணிவகுப்பு மரியாதையின்போது தரைப்படையினரின் கவச வாகனங்கள், பல்குழல் ஏவுகணைகள் போன்றவையும், கடலில் கடற்படையினரின் பயணக்கப்பல்கள், யுத்த படகுகள் போன்றவையும், ஆகாயத்தில் விமானப்படையினரின் கிபிர், மிக் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், பயண விமானங்கள் போன்றவையும் அணிவகுத்துச் சென்றன.

அணிவகுப்பு மரியாதையில் 3 ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட படையினரும் பொலிஸாரும் கலந்துகொண்டனர்.

**காலிமுகத்திடலில்**
**100 அடி கொடிக்கம்பம்**

இறுதியில் காலிமுகத்திடலில் நிலையாக நடப்பட்டிருக்கும் 100 அடி உயரமுள்ள கொடிக்கம்பத்தில் ஜனாதிபதி 'ரிமோட் கொன்ட்ரோல்' மூலம் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இக் கம்பத்தில் தினமும் காலையில் சூரிய உதயத்தின்போது தேசியக் கொடி ஏற்றப்பட்டு மாலை சூரிய அஸ்தமனத்தின்போது அது இறக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, அவர் தலைமை தாங்கும் இளைஞர் முன்னணியின் உதவியுடன் இக்கொடிக் கம்பத்தைத் தயாரித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரதின நிகழ்வையொட்டி காலி முகத்திடல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் படையினரும், பொலிஸாரும் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்ச்சி இடம்பெற்ற காலி முகத்திடல் பகுதியில் விமான எதிர்ப்புப் படையினரும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அருகில் கடலில் கடற்படைப் படகுகள் எதற்கும் தயாராக ரோந்து சுற்றி வந்தன.

இதேசமயம், கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் படையினர் காலை முதல் பலத்த தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வெளியிடங்களில் இருந்து கொழும்பிற்குள் நுழைந்த வாகனங்கள் அனைத்தும் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டன. பஸ்களில் வந்த பயணிகள் இறக்கிச் சோதனை செய்யப்பட்டனர். (சி)

## தவறிவிட்டது

**ஆறுமுகம் சுப்பிரமணியம் என்பவரது NP - JG XXXX எனும் தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் யாவும் ஆனைப்பந்திக்கும் நாவாந்துறைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**இல 29, நாவலர் வீதி, நாவாந்துறை**
**T.P 222 3688, 222 5985**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஏரம்பு சின்னம்மா (சின்னன்)



கைதடி தெற்கு,கைதடியைச் சேர்ந்த ஏரம்பு சின்னம்மா நேற்று (04.02.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை - பொன்னி தம்பதியினரின் மூத்தமகளும் கதிரவேலு- கறுப்பம்மா தம்பதியினரின் மருமகளும் ஏரம்புவின் அன்பு மனைவியும் சரஸ்வதி, திருச்செல்வம், நவரத்தினம் (இத்தாலி), செல்வரத்தினம் (இத்தாலி), குணரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வல்லிபுரம், பரமேஸ்வரி, மனோன்மணி (இத்தாலி), சிவபாதமலர் (இத்தாலி), மஞ்சுளாதேவி (சுவிஸ்), தவரோகினி (சுவிஸ்), தயாளினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.* (70831)

தகவல்:
ஏ.திருச்செல்வம் (மகன்),
ப.வல்லிபுரம் (மருமகன்)

### செல்லத்துரை அசுந்தாராணி (அனி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அசுந்தாராணி 04.02.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை (சீமான்பிள்ளை) - திவ்வியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம்-பாக்கியம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (சின்னமணி) அன்பு மனைவியும் பொன்கிளி, லீலா, சிசிலியா (பிள்ளை), இராஜேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சின்னக்கிளி, டொன்பொஸ்கோ ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யூலியற்மாலினி (மாலா), மரினோ (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலம், நித்தியா ஆகியோரின் மாமியாரும் மிதுஷனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிஸ்யகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (70829)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிதம்பரம் பிரபாகர்



மட்டக்களப்பு, பெரியஊறணியை பிறப்பிடமாகவும் 30/1, காட்டுக்கந்தோர் லேன்,சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்துவந்தவருமான சிதம்பரம் பிரபாகர் (03.02.2008) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் பிரதிக்கா, பிரதீபா, பிரதிஸ்டா, டிலக்ஷன், ஆன் கத்தரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமாரின் (உரிமையாளர், கண்ணன் லக்ஷி வோச் வேக்ஸ்) மாமனாரும் நிதுசனாவின் பாசமிகு பேரனும் ஜேசுதாசனின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2008) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/1, காட்டுக்கந்தோர் லேன்,*
*சுண்டிக்குளி,யாழ்ப்பாணம்.*

தகவல்:
மகன், மருமகன்

### அழகரத்தினம் கனகசபை
**(ஆசிரியர், யா/சந்திரமௌலீசா ம.வி)**



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட அழகரத்தினம் கனகசபை நேற்று (04.02.2008) திங்கள் கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினம் -வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் பொன்னுத்துரை- புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும் சுதாகரன், சுவர்ணா(சுவிஸ்), பிரசாந் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் சிவரூபனின் மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி, தர்மராசா, பத்மநாதன் (ஆசிரியர், யா/அச்செழு சைவப்பிரகாசவித்தி.), பற்குணநாதன்(நகரசபை,சாவகச்சேரி), தவராசா, ரவிச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் தேவபாதம் (மருத்துவபீடம்), திருநாவுக்கரசு (கனடா), சிவலோகநாதன் (கனடா), ஆனந்தராசா (கனடா), காலஞ்சென்ற யோகராணி, சுகிர்தராணி(கனடா), யமுனாராணி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (சுதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தரப்புத் தொடர்

# இலங்கை - இந்தியா இன்று பலப்பரீட்சை

பிரிஸ்பேன், பெப்.05

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் இன்றைய 2ஆவது ஆட்டத்தில் இலங்கை, இந்தியா ஆகிய அணிகள் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய 3நாடுகள் பங்கேற்கும் கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளிடையே நடந்த முதல் ஆட்டம் மழையால் பாதியில் ரத்து செய்யப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன. இந்நிலையில் முத்தரப்புத் தொடரின் 2ஆவது ஆட்டம் பிரிஸ்பேனில் இன்று செவ்வாய்க்கிழமை நடக்கிறது. இதில் இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன.

இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சில் சமபலத்துடன் இருக்கின்றது. இதனால், அந்த அணியைத் தோற்கடிக்க இந்திய வீரர்கள் மிகவும் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

ஜெயசூரியா, சங்கக்காரா, ஜெயவர்த்தன போன்ற உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இலங்கை அணியில் உள்ளனர். கிரிக்கெட் உலகில் அதிக விக்கெட்டுகளைச் சாய்த்த



வீரரான முரளிதரன், மற்றும் சமிந்தவாஸ், மலிங்கா போன்ற மிரட்டும் பந்துவீச்சாளர்கள் எதிரணியை அச்சுறுத்தக் காத்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்திய அணியின் துடுப்பாட்டம் கவலை அளிக்கும் வகையில் இருந்தது. இளம் வீரர்கள் தங்கள் திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். காயம் காரணமாக முதல் போட்டியில் விளையாடாத யுவராஜ் சிங் இன்று ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது வருகைதுடுப்பாட்டத்துக்கு பலம் சேர்க்கும் என நம்பலாம். யுவராஜ் இடம்பெறும் பட்சத்தில் புதுமுக வீரர் மனோஜ் திவாரி நீக்கப்படுவார்.

இலங்கை, இந்திய அணிகள் சம பலத்துடன் இருப்பதால் இன்றைய ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டி பகலிரவாக நடக்கிறது. இலங்கை நேரப்படி காலை 8.45 மணிக்கு போட்டி தொடங்குகிறது.

போட்டியில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படும்இருஅணியினதும்விவரம்வருமாறு:-

இலங்கை:- ஜெயவர்த்தன (அணித்தலைவர்), சங்கக்காரா, ஜெயசூரியா, அமரசிங்க, டில்சான், சமரசில்வா, உபுல்தரங்கா, சமிந்தவாஸ், முரளிதரன், குலசேகர, மஹ்ரூப், மலிங்க, கப்புகெதர, பெரேரா, வெலிகெதரா.

இந்தியா:- டோனி (அணித்தலைவர்), ஷேவாக், டெண்டுல்கர், கம்பீர், யுவராஜ் சிங், ரோகித் சர்மா, உத்தப்பா, பதான், ஹர்பஜன் சிங், சிறிசாந்த், இஷாந்த் சர்மா, தினேஷ் கார்த்திக், சுரேஷ் ரெய்னா, மனோஜ் திவாரி, பியூஸ் சாவ்லா, பிரவீன்குமார், முனாப் பட்டேல்.

இரு அணிகளும் இன்று மோதுவது 96ஆவது போட்டி ஆகும். இதுவரை நடந்த 95 ஆட்டங்களில் இந்தியா 49 ஆட்டங்களில் வெற்றி பெற்று இருக்கிறது. இலங்கை 37 இல் வாகை சூடியுள்ளது. 9 ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

## பிரிஸ்பேன் துளிகள்

★ இந்திய அணித்தலைவர் டோனி ஆரம்ப காலத்தில் தனது அதிரடி ஆட்டத்தால் ரசிகர்களின் மனங்களை வென்றார். தற்போதைய ஆஸ்திரேலியத் தொடரில் மோசமான நிலையில் தவித்த இவர் ருவென்ரி/20 போட்டியில் 27 பந்துகளில் 9 ஓட்டங்களை எடுத்தார். நேற்றுமுன்தினம் பிரிஸ்பேனில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இவருக்கு 37 ஓட்டங்களை எடுக்க 61 பந்துகள் தேவைப்பட்டன. ஆமை வேகத்தில் துடுப்பெடுத்தாடிய இவர் ஒரேயொரு பவுண்டரி மட்டும் அடித்து ஏமாற்றினார்.

★ நேற்றுமுன்தினம் 'டக்' அடித்த ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங், இந்தியாவுடனான போட்டியில் மூன்றாவது முறையாக ஓட்டக்கணக்கைத் தொடக்கும் முன் வெளியேறினார். இது ஒருநாள் போட்டிகளில் அவரது 17ஆவது 'டக்' ஆகும். இதன்மூலம் அதிக 'டக்' அடித்த ஆஸ்திரேலியர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். முதலிடத்தில் கில்கிறிஸ்ற்(18) இருக்கிறார்.

★ மிகவும் நேர்மையான வீரர் என்பதை ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ற் மீண்டும் ஒரு முறை நிரூபித்தார். நேற்றுமுன்தினம் சிறிசாந்த் பந்தில் இவர் டோனியால் பிடியெடுக்கப்பட்டார். இதற்கு இந்திய வீரர்கள் மேன்முறையீடு செய்தனர். நடுவர் ஸ்டீவ் டேவிஸ் 'இல்லை' என்று மறுத்தார். ஆனால், மனச்சாட்சிப்படி நடக்கும் கில்கிறிஸ்ற் தானாகவே மைதானத்தை விட்டு வெளியேறினார்.

★ சச்சின் நேற்றுமுன்தினம் தானாகவே விக்கெட்டைப் பறிகொடுத்து ஏமாற்றம் அளித்தார். தனது 19 ஆண்டுகாலக் கிரிக்கெட் வாழ்க்கையில் முதன்முறையாக 'ஹிட்-விக்கெட்' முறையில் அவர் ஆட்டமிழந்தார். துடுப்பாட்ட வீரர் தனது சமனிலையை இழந்து உடல் அல்லது துடுப்பின் மூலம் 'பெயில்லை' தட்டி விடும் போது 'ஹிட் -விக்கெட்' முறையில் ஆட்டமிழக்கிறார். இந்த விக்கெட் பந்து வீச்சாளர் கணக்கில் சேரும். நேற்றுமுன்தினம் 7ஆவது ஓவரை வீசினார் பிரட் லீ. 3ஆவது பந்தை அடிப்பதற்காக சச்சின் பின்னோக்கி நகர்ந்த போது, அவரது கால் பட்டு 'பெயில்ஸ்' விழுந்தது. உடனே பிரட் லீ முறையீடு செய்தார். மூன்றாவது நடுவரிடம் கேட்டனர். 'ரீப்ளேயில்' சச்சின் செய்த தவறு உறுதி செய்யப்பட, 'ஹிட்-விக்கெட்' முறையில் ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் இவ்வாறு ஆட்டமிழக்கும் 3ஆவது இந்திய வீரராகிறார் சச்சின். இதற்கு முன் நயன் மொங்கியா பாகிஸ்தானுக்கு எதிராக ஷார்ஜாவில் (1995) நடந்த போட்டியில் அக்ரம் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதேபோல் கும்ளே நியூஸிலாந்துக்கு எதிராக வெலிங்டனில் நடந்த ஆட்டத்தில் இம்முறையில் பெவிலியன் திரும்பினார்.

# விடைபெற்றார் பொலக்



ஜொகன்னஸ்பேர்க், பெப்.05

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான ஷோன் பொலக், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 5ஆவது ஒருநாள் போட்டியுடன் சகலவிதமான சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் விடைபெற்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் தனது அணி வெற்றி பெற தேவையான கடைசி நான்கு ஓட்டங்களையும் பவுண்டரி ஒன்றின் மூலம் பொலக் பெற்றுக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஏற்கனவே டெஸ்ட், ருவென்ரி/20 போட்டிகளிலிருந்து கடந்த மாதம் ஓய்வுபெற்றிருந்த பொலக், நேற்று முன்தினம் கடைசி சர்வதேச போட்டியில் களம் கண்டிருந்தார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக, மிரட்டும் பந்துவீச்சாளராக, துடிப்புமிக்க களத்தடுப்பாளராக, ஒட்டுமொத்தத்தில் பாராட்டும்படியான அணித்தலைவராக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வரலாற்றில் தனது முத்திரையை ஆழமாகப் பதித்தவர் பொலக். 34 வயதான பொலக்கின் தந்தை மற்றும் பேரன் ஆகியோரும் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களாக விளங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

108 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பொலக் 2 சதங்கள், 16 அரைச் சதங்களுடன் 3,781 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். நேற்றுமுன்தினம் தனது 303ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய அவர், தனது ஒருநாள் போட்டிகளின் ஓட்ட எண்ணிக்கையை 3,519 ஓட்டங்களுடன் நிறைவு செய்திருந்தார். ஒருநாள் போட்டிகளில் அவர் ஒரு சதத்தையும் , 14 அரைச் சதங்களையும் விளாசியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 421 விக்கெட்டுகளையும், ஒருநாள் போட்டிகளில் 393 விக்கெட்டுகளையும் பொலக் கைப்பற்றியுள்ளார்.

நேற்றுமுன்தினம் தனது கடைசிப் போட்டிக்காகக் களமிறங்கியதிலிருந்து, கடைசி விக்கெட்டை பொலக் கைப்பற்றியது, கடைசிப் பந்தினை வீசியது, வெற்றிக்காக ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது என மைதானமே உணர்ச்சி பூர்வத்துடன் அவருக்கு விடைகொடுத்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அவர் தொடர்நாயகன் விருதை போல் டுமினியுடன் பகிர்ந்துகொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.




# ஒழுக்க வீரர்களாக இருங்கள்!

## இந்திய அணியினருக்கு சரத்பவார் எச்சரிக்கை

புதுடில்லி, பெப்.05

போட்டிகளின் போது இந்திய அணி வீரர்கள் ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டும் என்று அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ. தலைவர் சரத் பவார் கூறியவை வருமாறு:-

''இந்திய வீரர்கள் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதை கிரிக்கெட் சபை பொறுத்துக்கொண்டிருக்காது. ஹர்பஜன் மோசமான வார்த்தை எதையும் பயன்படுத்தியிருக்கமாட்டார். அவர் 'கலி' என்ற பஞ்சாபி வார்த்தையைத்தான் பயன்படுத்தினார். விளையாட்டு வீரர்கள் நம் நாட்டின் தூதர்கள். அவர்கள் முறையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.'' - என்று கூறினார்.

# இளம் வீரர்களுக்கு டோனி ஆதரவு

ருவென்ரி/20 போட்டி மற்றும் அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் பிரிஸ்பேனில் நடந்த முதல் ஒருநாள் போட்டி ஆகியவற்றில் இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணியின் ஆட்டம் படுமோசமாக இருந்தது. கங்குலியை நீக்கியது தவறு என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன. இந்த நிலையில் இளம் வீரர்களுக்கு அணித்தலைவர் டோனி ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், '2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்கு சிறந்த அணியை உருவாக்க வேண்டும். அப்போது இந்திய அணியில் இருக்கும் வீரர்கள் 80 முதல் 100 ஆட்டங்கள் ஆடியிருப்பது முக்கியமானதாகும். அப்படிப்பட்ட வீரர்கள்தான் நமக்கு தேவை. அது போன்ற வீரர்கள்தான் அணியில் இருக்கிறார்கள். இந்தத் திட்டம் நமக்கு வெற்றியையும் கொடுக்கலாம். பின்னடைவையும் அளிக்கலாம். ஆனால், இளைஞர்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.'' - என்றார்.

இதேவேளை, ஒருநாள் போட்டியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்ட இந்திய மூத்த வீரர் கங்குலி மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார். அவரிடம் டோனி தலைமையிலான இளம் வீரர்களுக்கு ஏதாவது அறிவுரை சொல்ல விரும்புகிறீர்களா என்று கேட்ட போது, 'அவர்களுக்கு நான் என்ன ஆலோசனை வழங்க முடியும். என்னால் அவர்களுக்கு வாழ்த்துகள் மட்டுமே சொல்ல முடியும்' என்று ஆதங்கப்பட்ட கங்குலி, இப்போது நான் பிரிஸ்பேனில் இல்லாமல் வீட்டில் இருப்பதை நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

# தொடரை வழித்தெடுத்தது தென்னாபிரிக்கா

ஜொகன்னஸ்பேர்க், பெப்.05

ஹேர்சல் கிப்ஸ் சதமடித்துச் சிறப்பிக்க மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி டக்வேர்த் லூவிஸ் விதிப்படி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாக வழித்தெடுத்தது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் பங்குபற்றிய டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்தது. இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற ருவென்ரி/20 தொடர் 1-1என்ற கணக்கில் சமனிலையானது. தொடர்ந்து ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதல் நான்கு ஆட்டங்களிலும் வென்ற தென்னாபிரிக்க அணி ஏற்கனவே தொடரைத் தனதாக்கிவிட்டது. இந்நிலையில், கடைசி மற்றும் 5ஆவது போட்டி நேற்றுமுன்தினம் ஜொகன்னஸ்பேர்க்கில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 295 ஓட்டங்களைக் குவித்தது. அணியின் முதல் விக்கெட்டாக பார்ச்மென்ற் வெறும் 2 ஓட்டங்களுடன் பொலக்கின் வேகத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இணைந்த டெவன் சிமித் -சந்தர்போல் ஜோடி அணியை ஆரம்பச்சரிவிலிருந்து மீட்டெடுத்து.

டெவன் சிமித்தின் ஆட்டத்தில் அனல் பறக்க, சந்தர்போல் தனது வழமையான - பொறுப்பான ஆட்டத்தைத் தொடர்ந்தார். இந்த ஜோடி தம்மிடையே 137 ஓட்டங்களை 22 ஓவர்களில் சேர்த்தனர். இந்நிலையில், அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த டெவன் சிமித் 91 ஓட்டங்களுடன் லாங்வெல்ற்றின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 76 பந்துகளைச் சந்தித்திருந்த அவர் தனது ஓட்ட எண்ணிக்கையில் 3 சிக்ஸர்களையும், 10 பவுண்டரிகளையும் சேர்த்திருந்தார். தொடர்ந்து மிரட்டிய லாங்வெல்ற், சந்தர் போலின் (51 ஓட்டங்கள்) விக்கெட்டையும் கைப்பற்றினார்.

அடுத்துக் களம்பு[illegible] ஆட்டமிழக்காமல் 4[illegible] பிராவோ 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். 50 ஓவர்கள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 295 ஓட்டங்களைச் சேர்த்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் லாங்வெல்ற் 3 விக்கெட்டுகளையும், பொலக், ஸ்ரைன், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலக்கைக் கலைத்த தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தார் டரன் பவல். இவரது வேகத்தில் அதிரடி வீரரும் அணித்தலைவருமான கிரேம் சிமித் 5 ஓட்டங்களுடன் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து இணைந்த கிப்ஸ்-கலிஸ் ஜோடி அணிக்கு நம்பிக்கை தந்தது. அணி 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை மழை குழப்பியது. நீண்ட நேரத்தின் பின்னர் - சுமார் 90 நிமிடங்களின் பின்னர் மீண்டும் ஆட்டம் ஆரம்பமானது. அப்போது தென்னாபிரிக்காவின் வெற்றி இலக்கு 31 ஓவர்களில் 211 ஓட்டங்களாக மாற்றப்பட்டது.

[illegible]ஆவது விக்கெட்டில் கலிஸ் -கிப்ஸ் ஜோடி [illegible] தென்னாபிரிக்கா வெற்றி நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. இருவரும் தம்மிடையே 175 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் கிப்ஸ் 102 ஓட்டங்களுடன் (84 பந்துகள், 13 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) டரன் பவலின் வேகத்தில் பவிலியன் திரும்பினார்.

பின்னர் இணைந்த கலிஸ் -பொலக் ஜோடி அணியின் வெற்றியை 13 பந்துகள் மீதமிருந்த பொழுது உறுதி செய்தது. இறுதியில் தென்னாபிரிக்கா 28.5ஆவது ஓவரில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவுசெய்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த ஜக்கலிஸ் 74 ஓட்டங்களையும் (70 பந்துகள், 7 பவுண்டரிகள்), பொலக் 10 ஓட்டங்களையும் (11 பந்துகள், ஒரு பவுண்டரி) பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இந்தவெற்றியின் மூலம் ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி அப்படியே அள்ளியது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹேர்சல் கிப்ஸ் தெரிவானார். தொடர் நாயகன் விருது போல் டுமினி, ஷோன் பொலக் ஆகியோருக்கு இணைத்து வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யுத்தம் தீவிரமடைந்தால் சர்வதேச நிதி உதவிகள் ஸ்தம்பிக்கும்

## கொழும்புக்கான நெதர்லாந்துத் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 5

இலங்கையில் மோதல் தீவிரமடைந்து, யுத்தம் மோசமாகி, உயிரிழப்புகள் அதிகரித்தால் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் நிதி உதவிகள் ஸ்தம்பிக்கும் என்று கொழும்புக்கான நெதர்லாந்துத் தூதுவர் ரேய்னோட் வன் டிக் தெரிவித்துள்ளார்.

இணைத்தலைமை நாடுகள் யுத்தம் தீர்வில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளதால் இதுவே தர்க்க ரீதியான விளைவாக அமையும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆங்கில வார இதழொன்றிற்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கருணா ஐரோப்பாவிற்குள் தப்புவதற்கு உதவிய நபரை ஐரோப்பிய ஒன்றியம் எவ்வாறு கையாளும் என்ற கேள்விக்கு ''குற்றவாளிக்கும் அவரைப் பாதுகாத்தவருக்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்புக் காணப்பட்டதற்கான ஆதாரம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் குற்றச் செயலிற்கு ஒத்துழைத்தவர்களாகக் கருதப்படுவது சட்டரீதியாகப் பொதுவான விடயம்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''இலங்கையின் ஆட்சியாளர்கள் குறித்தோ அல்லது உயர் குழாம் குறித்தோ இதனைத் தாம் தெரிவிக்கவில்லை'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கருணாவின் தற்போதைய நிலை முழுக்க முழுக்க இலங்கைக்கும் பிரிட்டனிற்கும் இடைப்பட்ட விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைப் பாதுகாப்பதால் அவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள தூதுவர், அரசும் இவ்வாறு செயற்பட்டால் அதேபோன்ற நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ஸிம்பாப்வே அரசின் மனித உரிமைக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாததால் அந்த நாட்டின் 150 அதிகாரிகளுக்கு இவ்வாறான தடை விதிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இலங்கையில் என்ன நடைபெறுகின்றது என்பது நிரூபிக்கப்பட்டாலே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலங்கையில் இந்த நிலை ஏற்படாது என எதிர்பார்க்கின்றேன். எனினும், மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சர்வதேச சமூகத்திற்கு சொல்வதற்கு ஜனாதிபதி முயல்வார்'' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### யுத்தம் நடைபெற்றாலும் மனிதாபிமானப் பணி தொடரும்

அந்தச் செவ்வியில் அவரிடம் கேட்கப்பட்ட ஓரிரு முக்கிய கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கேள்வி:- இலங்கை முழு அளவில் யுத்தம் ஒன்றுக்குள் குதித்தால் சர்வதேசத்தின் பெறுபேறு என்னவாக இருக்கும்?

பதில்:- சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பை ஏற்கனவே நாம் எதிர்கொள்ளத் தொடங்கிவிட்டோம். சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பு மூன்று கட்டங்களைக் கொண்டது.

'இராணுவ நடவடிக்கை மூலம் வட பகுதியைத் துப்புரவு செய்யப்போகிறோம்' என ஜெனரல் பொன்சேகா கூறியிருக்கிறார். இந்த நிலையில் - யுத்தம் இடம்பெற்றாலும் இடம்பெறாவிட்டாலும் எமது மனிதாபிமானப் பணிகள் தொடரும். பொது மக்களுக்கு எமது உதவிகள் அவசியம். தேவைப்படுவோருக்கு அவசரகால உதவிகளை வழங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, ஐ.நா. அகதிகள் தூதரகம் போன்றவற்றுக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. அது தொடரும்.

அடுத்தது - எந்தப் பிணக்குத் தொடர்ந்தாலும் மனிதாபிமான உரிமைகள் பேணப்பட வலியுறுத்துவோம். அதற்காகக் குரல் எழுப்புவோம்.

மூன்றாவதாக - சம்பந்தப்பட்ட தரப்புகளை அமைதி முயற்சிக்குக் கொண்டு வரத் தூண்டுவோம்.

கடைசியாக - பிணக்குகளில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தொடர்பான சர்வதேச இணக்கப்பாடு ஒன்று உள்ளது. 'பாரிஸ் கோட்பாடு' எனப்படும் இந்த இணக்கம், போரில் ஈடுபட்டுள்ள நாட்டுக்கு நிதி (பட்ஜெட்) உதவி அளிப்பது நல்ல செயன்முறை அல்ல என்று வலியுறுத்துகிறது.

### 'பட்ஜெட்' ஊடான நிதி உதவி இல்லாமல் போகும்

நாம் இணங்கியுள்ள அந்த முடிவின் படி, 'பட்ஜெட்' ஊடாக வழங்கப்படும் நிதி உதவிகள் அனைத்தும் இல்லாமல் போக, அத்திட்டங்களும் ஸ்தம்பிக்கும்.

கேள்வி:- சர்வதேசத்தின் விமர்சனம் வெறும் விரிவுரைப் பேச்சு மட்டுமே என்ற எண்ணம் இலங்கையில் உள்ளது. உங்களின் இந்த சொற்கள் தொடர்ந்து செயல்களாக மாற்றப்படாத வரையில் அந்தச் சொற்கள் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று (இலங்கை) அரசு கருதுகின்றதே........?

பதில்:-இலங்கைக்கு 'லெக்ஸர்' (விரிவுரை) வழங்க வேண்டியது அவசியம் என சர்வதேச சமூகம் நினைக்கவில்லை. காசோலைகளில் கையெழுத்திடுவதை மட்டுமே நாம் நிறுத்துவோம். அதைக்கூடப் பகிரங்கமாகச் செய்ய வேண்டும் என்றில்லை.

வெளியே பகிரங்கப்படுத்தாமல் - நீண்ட காலத்துக்கு முன்னர் இது தொடர்பாக வரையறை செய்யப்பட்ட வழிகாட்டல்களை - இப்போது பின்பற்றினால் மட்டுமே போதும்.

இலங்கைக்குப் போதிப்பது தடுக்கப்படக்கூடாது எனச் சிலர் கருதினாலும், பெரும்பாலான நிபுணத்துவ இராஜதந்திரிகள் எப்போதுமே போதிக்கும் வேலையைச் செய்யமாட்டார்கள்.

ஒரு விடயம் குறித்து உலகம் என்ன கருதுகின்றது என்று கூறுவதுடன் அவர்கள் அமைந்துவிடுவார்கள்.

நாட்டில் நடைபெறுவது தொடர்பான எமது கருத்துணர்வை வெளிப்படுத்துவதற்கு, அது தொடர்பான சர்வதேச சமூகத்தின் மௌனத்தை எடைபோடுவதே சிறந்த வழியாகும். - என்றார் அவர். (சி)

# குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீளக் கொண்டுவர பாதுகாப்புச் செயலருக்கு எந்த அதிகாரமும் கிடையாது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கருத்து



கொழும்பு, பெப். 5

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் சகோதரர் மட்டுமே. அவர் ஒருபோதும் நாடாளுமன்றச் சட்டதிட்டங்களுக்கும் - கொள்கைகளுக்கும் முரணாகச் செயற்பட முடியாது. குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீளக் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய சுகாதார சேவைகள் பொது ஊழியர் சங்கத்தின் புதிய அலுவலர்கள் உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சு ஒன்றின் செயலாளரோ அல்லது வேறெந்த உயர் அதிகாரியோ நாடாளுமன்ற சட்டத்திட்டங்களுக்கு ஏற்பவே செயற்பட வேண்டும். இந்தச் சட்டதிட்டங்களையும் கொள்கைகளையும் மீறி தொழில் சங்கங்களையும், ஊடகங்களையும் கட்டுப்படுத்துவதற்கும் - மிரட்டுவதற்கும் இடமளிக்க முடியாது. இவ்வாறான நடைமுறைக்கு எதிராக சகல சக்திகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

தொழிற்சங்கத் தடை மாத்திரமல்லாது பாரிய ஊடகத் தடைகளும் இன்று இந் நாட்டில் அமுலாகின்றன. இத்தடைகளை உடனடியாகநீக்குவதற்குநாம் அணிதிரளவேண்டும்.

இந்த ஊடகத்தடை இன்று இரண்டு வகைகளில் உள்ளன. ஒரு புறத்தில் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது, மறுபுறத்தில் ஒரு சில ஊடகவியலாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கி மௌன மாக்குவது. இந்த இரண்டு வழிமுறைகளும் இப்போது கடைப்பிடிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லையென்பதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்கள் யாவும் இதனை வெளிப்படுத்தியுள்ளன.

இந்நாட்டு ஊடகங்களுக்கு இன்றைய தலைவிதி 2001 ஆம் வருடத்திலும் இருந்தது. ஆயினும் 2001ஆம் ஆண்டு நாம் பதவிக்கு வந்ததும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரததமர் என்ற வகையில் நான் அந்தச் சகல தடைகளையும் நீக்கி ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் சுதந்திரமாகத் தமது பணிகளை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கினேன். அதனால், ஊடகசுதந்திரம் பாதுகாக்கப்பட்டது.

அன்று எம்மால் பாதுகாத்து வழங்கப்பட்ட ஊடக சுதந்திரம் இந்த அரசின் கீழ் மீண்டும் இல்லாமற் செய்யப்பட்டிருக்கிறது. இதனை எப்படிச் சொல்வதென்றால் இன்று எமது நாடு மீண்டும் சர்வதேச பத்திரிகை நிறுவனத்தின் சோதனைப்பட்டியலில் கூட உள்ளடங்கியுள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்குள் 6 ஊடகவியலாளர்களும் பொது ஜன ஊடகத் துறையுடன் சம்பந்தப்பட்டுச் செயற்பட்ட 5 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் உலகில் இரண்டாவது இடத்தை இலங்கை பிடித்துள்ளது.

இன்று முதலாவது இடத்தைக் கைப்பற்றுவதற்கே அரசு முயற்சித்து வருகிறது. - என்றார். (சி)

# உபகுழுவின் அறிக்கை கிடைத்ததும் 13ஆவது திருத்தம் அமுலாகுமாம்!

## அரசுத் தரப்பில்தெரிவிப்பு

கொழும்பு,பெப்.5

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நடை முறைப்படுத்தும் வழிவகைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சரவையால் அமைக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை உபகுழு அவை தொடர்பாக ஆராய்ந்து ஜனாதிபதியிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தவுடன் ஜனாதிபதி அத்திருத்தத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துவார் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா இத்தகவலை தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில். கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே அவர் இதனைக் கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழிவகைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை அரசு அமைத்துள்ளது.

இந்த உபகுழுவிற்கு பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தலைமை தாங்குகிறார்.

இந்த உபகுழு வடக்குக் கிழக்கின் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி விரிவாக ஆராயும்.

வெகு சீக்கிரத்தில் இந்த உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து கால தாமதமின்றி இத்தீர்வு யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி மேற்கொள்வார்.

தீர்வு யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் வடக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைக்கவும் முதற்கட்டமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதி இதை நடைமுறைப்படுத்துவரா அல்லது கடந்த அரசியல் தலைவர்கள் போல் தீர்வைக் கிடப்பில்போட்டுவிடுவாரா என்று யாரும் சந்தேகப்படத் தேவையில்லை.

எல்லாக் கட்சிகளினதும் இணக்கப்பாட்டைப் பெற்ற இத்தீர்வு யோசனையை நடைமுறைப்படுத்துவதில் எந்தச் சிக்கலும் இல்லை - என்றார் அவர். (சி)

# இலங்கையில் பயணம் செய்வது குறித்து ஆஸி. தன் பிரஜைகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு,பெப்.5

இலங்கையில் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாகச் செல்லும் சில பகுதிகளுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஆஸ்திரேலிய அரசு தனது பிரஜைகளை கேட்டுக்கொண்டுள்ளது.

தம்புள்ள குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையின் கலாசார முக்கோணப் பகுதிகளுக்குச் செல்வதை சகல ஆஸ்திரேலியர்களும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா விடுத்துள்ள உயர் மட்ட எச்சரிக்கைஇதுவென சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் மத்திய - தென் பகுதிகளில் அரசியல் ரீதியிலான வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைவரம் மேலும் மோசமடையலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதிக்கும் சிலாபம் வஸ்கமுவ தேசிய பூங்காவிற்கும், வில்பத்து மற்றும் கலாசார முக்கோணப் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாமென கேட்டுக்கொள்கிறோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் வன்முறை காரணமாக இக்காலப்பகுதியில் அங்கு செல்வது குறித்து மீள்பரி சீலனை செய்யுமாறும் ஆஸ்திரேலிய வெளிவிவகாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தாக்குதல்கள் தொடருகின்றன. எங்கும், எவ்வேளையிலும் மேலதிகத் தாக்குதல்கள் இடம்பெறலாம்.

இலங்கை அரசு மற்றும் இராணுவ இலக்குகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் ஆஸ்திரேலியர்களும் பலியாகலாம் - என்றும் அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாதாரண சூழலைக் காரணம் காட்டிக்கொண்டு எமது பிரதேச வளங்களைக் கைவிட முடியாது

## தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

எமது பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் எமது பகுதியில் உள்ள அசாதாரண சூழ் நிலையை காரணம் காட்டிக்கொண்டு எமது வளங்களைக் கைவிடமுடியாது. எங்கள் பகுதியில் தாராளமாக பயிரிடக் கூடிய நிலங்கள் பல இருக்கின்றன - அவற்றை உரியமுறையில் பயன்படுத்த வேண்டும்.

பயிற்செய்கைகள் மேற்கொள்ள முடியாத நிலங்களை விடுத்து ஏனைய நிலங்களில் பயிர்கள் செய்கை பண்ணப்படல் வேண்டும் - இவ்வாறு குறிப்பிட்டார் தொன்மராட்சி பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன்.

கடந்த மாதம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கெயர் அனுசரணையுடன் அபிவிருத்தியில் சமூகவெளிப்பாடு கண்காட்சி இடம்பெற்றது. அதில் பிரதமஅதிதியாக கலந்து உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

செல்வி விஜிதா சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்: எமது விவசாயிகள் ஆற்றல், அனுபவம் நிறைந்தவர்கள். இவ்வாறு ஆற்றல் அனுபவம் இருந்தாலும், அவர்கள் விவசாயத்தில் முழுமையான வெற்றியைக் காணமுடியவில்லை.

ஆனால் இவர்களை மேம்படுத்த கெயர் நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் முன்வந்து விவசாயிகளுக்கு வேண்டிய வள ஆய்வுகளையும் மற்றும் வளப்பயன்பாடுகளயும் விளக்கி வருகின்றது. அதற்குப் பக்கபலமாக விவசாயத் திணைக்கம், கமநலசேவை நிலையங்கள் உதவி வருகின்றன. கெயர் நிறுவனம் எமது பிரதேசத்திற்கு போதிய வசதிகளை செய்து வருகின் றது. யுத்த சூழ்நிலையிலும் வேண்டிய உதவி களை வழங்கி வருகின்றது. விவசாயத்தினர் கெயர் நிறுவனத்தின் ஆலோசனைகளைப் பெற்று விவசாயத்தில்மேம்பட வேண்டியது மிக அவசியம். தொடர்ந்தும் நாம் அவர்களின் உதவிகளை இலவசமாகப் பெற வேண்டும் என எண்ணக் கூடாது.



தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் இலவசமாகப் பொருள்களைப் பெற்று வாழ நினைக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். எமது மக்கள் நீண்டகால பாரம்பரிய சேமிப்புப் பழக்கவழக்கம் கொண்டவர். அந்த நிலையை இன்று மறந்துவிட்டார்கள் - என்றார். (203 -131)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற அபிவிருத்தியில் சமூக வெளிப்பாடு கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கண்காட்சி மண்டபத்தைத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அருணன்)*

## சுகவாழ்வு தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகால் சுகவாழ்வு தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த சனிக்கிழமை புறநிலைப் பட்டப் படிப்புகள் அலகினர் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன் தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிவபாலன், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ நிபுணர் பூ. லக்ஷ்மன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

அத்துடன் நிகழ்வில் பங்குபற்றியவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது. இத்தகைய விழிப்பூட்டல் செயலமர்வுகள் தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-79)

## யாழ். மாவட்டத்தில் புதிதாக 6 மத்தியஸ்தர் சபைகள் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ். மாவட்டத்தில் புதிதாக ஆறு மத்தியஸ்தர் சபைகள் பிரதேச செயற் பிரிவு ரீதியாக உருவாக்கப்படவுள்ளன.

மேற்படி பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகளில் அங்கத்தவராக விண்ணப்பிக்காதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மத்தியஸ்தர் சபை ஆணைக் குழுவினாலும் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினாலும் நடத்தப்பட்டன.

இதேவேளை ஏற்கனவே மத்தியஸ்தர் சபை ஆரம்பிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெற்றிடமாகவுள்ள மத்தியஸ்தர் வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் காரைநகர், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, மருதங்கேணி,நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் விரைவில் மத்தியஸ்தர் சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (203-95)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.5

வீதி அபிவிருத்தி அதிகாரசபை- உலக வங்கி அனுசரணையுடன் செய்யப்படவுள்ள வீதி வேலைகளுக்கு நில அளவையியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர்.

விண்ணப்பதாரர் பி.எஸ்.சி. பட்டதாரியாக அல்லது டிப்ளோமா பட்டத்துடன் 8 வருட அனுபவம் உள்ளவராக இருப்பதுடன் 55 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். தகுதியானவர்களை எதிர் வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், உலக வங்கியுடனான வீதி. அபி.திட்டம், லிபேர்ட்டி ரவர், பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்திரமுல்ல எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-95)

* * *

யாழ்ப்பாணம், பெப்.5

அரச ஊழியர்களின் அரச கரும மொழித் தேர்ச்சியின் பொருட்டு நடத்தப் படவுள்ள தமிழ், சிங்கள, ஆங்கில மொழிப் பரீட்சைகளுக்கு அரச ஊழியர் களிடமிருந்து அரச கரும மொழிகள் திணைக் களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அரசகருமமொழிகள்திணைக் களத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் வடக்கு- கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (203)

## முகாமைத்துவ உதவியாளரை வகுப்பு 11 இற்கு உயர்த்துவதற்கான பரீட்சைப் பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம், பெப்.5

திணைக்கள அலுவலகங்களில் வகுப்பு II பதவிகளில் கடமையாற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களை வகுப்பு II இற்கு பதவியுயர்த்துவதற்கு நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கடந்த வருடம் ஜூலை ஏழாம் திகதி நடாத்தப்பட்ட இப்பரீட்சையின் பெறுபேறுகளைச் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.திருவேரகன் அனுப்பிவைத்துள்ளார். (203-207)

# உலக மக்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்கப்பட்ட செபமாலை தாசர் சபை

## யாழ். ஆயர் சௌந்தரநாயகம் உரை

யாழ்ப்பாணம், பெப்.5

நமது நாட்டுக்குருக்களால் ஸ்தாபிக்கப் பட்ட ஒரேயொரு தியான யோக செப மாலைத் தாசர் சபை. இச்சபை உலக மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் செப,தப முயற்சிகளை மேற்கொண்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பிரார்த்திக்கின்றது.



இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

தோலகட்டி ஆச்சிரமத்தின் செபமாலைத் தாசர் சபையின் 80ஆவது ஆண்டு விழா கடந்த சனிக்கிழமை காலை அருள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அத்திருப்பலியில் மறையுரை நிகழ்த்தும் போதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

ஆயர் தனது மறையுரையில் மேலும் தெரிவித்ததாவது:

இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன்பு எமது நாட்டிற்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதம் செபமாலைத் தாசர் சபையினுடைய உதயம். நம்முடைய நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்து கொண்டே வந்தன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் நம்முடைய நாட்டுக் குழுக்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேயொரு தியான யோக சபையென்றால் அது அருட்தந்தை தோமஸ் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்ட செபமாலைத் தாசர் சபை என்பது மதிப்பிற்குரிய தொன்றாகும்.

இந்தச் சபை ஆரம்பித்து 60ஆவது வருடத்தின் நிறைவிலே ''ஆசியாவின் ஜோதி'' என்ற நூல் செபமாலைத் தாசரால் பிரசுரிக்கப்பட்டது. ஆசியாவின் ஜோதி என்றால் ஆசியக் கண்டத்திலே முதன் முதலாக ஆசிய நாட்டைச் சேர்ந்தவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சித்தியான யோக சபை என்று சொன்னால் முதல் முதல் அந்தப் பெருமை செபமாலை தாசர் சபைக்கே சேரும்.

இந்தச் செபமாலைத் தாசர் சபை தற்பொழுது உலக மக்கள் மத்தியிலே செப,தப் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சாத்தானுக்கு எதிரான போராட்டங்களிலே இவர்கள் நற்கருணை நாதருக்கு முன் செபமாலை செபித்து உலக மக்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறார்கள்.

இந்த ஸ்தாபகருடைய சீவியமானது எடுத்துக்காட்டான பரிசுத்த தனம் நிறைந்த ஒரு வாழ்க்கையாக இருந்தது. இவர் ஓர் உண்மையான இறைமனிதன் என்ற பெயரையும் பெற்றுக் கொண்டவர். இவருடைய புனிதர் பட்ட முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறவும் இச்சபை மென்மேலும் வளரவும் ஆசீர்வதிக்கின்றேன் - என்றார்.

இச் செபமாலைத் தாசர் சபை 1928ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதி தோலகட்டி என்னும் சிற்றூரில் மறைத்திரு தோமஸ் ஓ.எம்.ஐ அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இலங்கையில் ஆண்களுக்கு மட்டும் 5 துறவற இல்லங்களும் இந்தியாவில் 15 இற்கு மேற்பட்ட துறவற இல்லங்களும் உள்ளன. தாய் இல்லமான தோலகட்டி இல்லம் தற்போது அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

# நெடுந்தீவு ம.வி. முன்னாள் அதிபரின் நூறாவது பிறந்த தின நிகழ்வுகள்

நல்லூர், பெப்.5

நெடுந்தீவு மகாவித்தியாலயமும்- பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையும் நெடுந்தீவுக்கிளையும் இணைந்து நடத்தும் பாடசாலையின் ஆரம்ப கால அதிபர் அமரர் எட்வேட் நவரத்னசிங்கத்தின் 100ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு நவரத்தினசிங்கம் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரைகளை நெடுந்தீவு பங்குத் தந்தை செ.றோய் பேர்டினட், கா.புவனேந்திர சர்மாக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் ஜோன் செல்வம், தேவசபைப் போதகர் ஜி.அமலதாஸ் ஆகியோர் நிகழ்த்துவர்.

நினைவுரைகள் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன், நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அழகரத்தினம் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் அமரரின் திருவுருவச் சிலைக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம்பெறும். (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி இலவச வெளியீடு

சுழிபுரம், பெப்.5

அபிராமிப்பட்டர் தினமான நாளை புதன்கிழமை அபிராமி அந்தாதிப்பாடல் ஆய்வுரை வெளியீடுகள் பஜனைச் சபையால் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. கைவசம் உள்ள பாடல் வெளியீடுகளை தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (203-28)

அம்பிகை துணை

*பழைய காளி கோயில் என விளங்கும்*

*கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி*

**திருவருள்மிகு ஸ்ரீசிவமஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்**

**வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2008**

07.02.2008 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றம்

20.02.2008 புதன்கிழமை 10.30 மணிக்கு தேர்

21.02.2008 வியாழக்கிழமை 10 மணிக்கு தீர்த்தம்

**இதன்பின் ஐந்து நாள்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறும்.**

**20 நாள்களும் நண்பகல் அன்னதானமும் மாலையில் லட்சார்ச்சனையும் நடைபெறும்.**

**தேவஸ்தானம்**

**இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிப்பான செய்தி!!!**

**சுத்தமான தேங்காய்ப் பால் கிறீம்!**

தேங்காயின் விலை உயர்ந்துள்ள இந்நிலையில் ஒரு தேங்காய்ப்பால் அளவான கிறீம் (50 கிராம்) பைக்கற் 23/= விலையில்

ஒரு பைக்கற் கிறீமினை மூன்று சில்வர் கப் சுடுதண்ணீரில் கரைப்பதன் மூலம் மூன்றுகப் **முதல்தரப் பாலினைப்** பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**அம்பிகை களஞ்சியம்**

304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70795)

## மரண அறிவித்தல்கள்

### *மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை*



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை 03.02.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் - பிரகாசி தம்பதியரின் பாசமிகு மருமகனும் றெஜினாவின் பாசமிகு கணவரும் மரியம்மா, காலஞ்சென்ற டானிசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பீற்றலோனாட் (P.L.மனுவேற்பிள்ளை - அமெரிக்கா), திரேஸ் அஞ்சலினா (நோர்வே), அன்ரன் றெஜிராஜ் (கனடா), சகாயப்பிரகாஸ (உளவளத் துணையாளர்), அருட்சகோதரி கௌசலா, அருள்மேரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் எட்வேட், கல்யாணி, குமுதா, கார்த்தியாயினி ஆகியோரின் மாமனும் ஸ்ரெனா, கார்த்திகா, நிகேதனா, பெவின், டிவைனா ஆகியோரின் அருமைப் பாட்டனும் காலஞ்சென்ற சின்னராசா, காலஞ்சென்ற அக்னஸ், ஜேசுதாசன் (கனடா), காணிக்கைமலர் (கனடா), ஆசீர்தாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென்.மேரிஸ் வீதி,*
*நாவாந்துறை.* *(70817)*

*தகவல்:*
**சகாயபிரகாஸ்** *(சுகிர் - மகன்).*

### *சுப்பையா சின்னத்துரை (பெயின்ரர்)*



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வதிவிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்தவருமான சுப்பையா சின்னத்துரை 03.02.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் கணவரும் நகுலேஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (சாந்தி ஸ்ரோர்ஸ்), சறோஜா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.02.2008 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*185/8, கில்னர் லேன்,*
*வண்ணார்பண்ணை.*
*(70813)*

*தகவல்:*
*மகன்:* **ஜெகதீஸ்வரன்**
*(சாந்தி ஸ்ரோர்ஸ்) நீராவியடி.*

## திறப்புவிழா நிகழ்வுகள்

கரவெட்டி, பெப்.5

வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட சமையல் அறைத் திறப்புவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அதிபர் எஸ்.சிவநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜனாப் முகமட் சாலிகீன் பங்குபற்றி சமயலறையைத் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (203-70)

* * *

கரவெட்டி, பெப்.5

வல்வை றோ.க.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தின்திறப்புவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யுனிசெவ் நிறுவன இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பிலிப்பி டியூமிரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக உலக உணவுத்திட்ட இலங்கைக்கான பணிப்பாளர் ஜனாப் முகமட் சாலிகீன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யுனிசெவ் நிறுவன யாழ். தலைவி யூடித் புறூனோ, யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன்,வல்வை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் ஆகியோர் கலந்து கொள்வர்.

(203-70)

## உலக வங்கி வீட்டுத் திட்டத்தில் சிறுப்பிட்டி கிழக்கு கிராமமும் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.5

உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டத்தில் சிறுப்பிட்டி கிழக்கு கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் ஏழு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதாகவும் மேன்முறையீட்டை அடுத்து 21 பயனாளிகளும் மொத்தம் 28 பயனாளிகள் தெரிவானதாகவும் கூறப்பட்டது.

இரண்டாம் கட்டத்தில் இந்தக் கிராமத்தில் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது திட்டங்கள் நிறைவடையும் நிலையில் உள்ளன என்று கிராம சேவகர் க. வைத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

(203)

## வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு இயக்குநர்சபை

கட்டைவேலி,பெப்.5

விடுவிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இயக்குநர்சபை ஒன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இதில் யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை யால் மக்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளையே நாடவேண்டியுள்ளது.

கூட்டுறவுச் சங்கக்கிளைகளால் மக்கள் பாதிப்படைவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கக் கிளைகளால் பிரச்சினைகள் வராமல் இருக்க இயக்குனர் சபை ஒன்று அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

(203-275)

**குறைந்த கட்டணத்தில்**

எந்த இடத்திலிருந்தும் எந்தத் தொலைபேசியிலும் வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக் கொள்ள 3/-

0777 554528 [சி/551264]

## வள்ளியம்மை வித்தியாலயத்தில் தரம் 10, 11 வகுப்புகள்

யாழ்ப்பாணம்,பெப்.5

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் இந்த வருடம் தொடக்கம் தரம் 10, 11ஆம் வகுப்புகளை ஆரம்பிக்க மாகாண கல்வி அமைச்சின் செயலர் அனுமதி வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இப்பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் 9 வரையான வகுப்புகளே நடைபெற்று வந்தன.

இப்பாடசாலை வசதிகுறைந்த பிரதேசத்தில் அமைந்துள்ளமையால் தரம் 11 வரை மாணவர்கள் கல்வி கற்க இது உதவியாக இருக்கும் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலை வளர்ச்சிக்கு பாடசாலை அதிபர் க.ஹரிஹரசக்தி அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையம் ஆகியவற்றின் உதவிகளை நாடியுள்ளார் என்றும் கூறப்பட்டது. (203)



**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்**

**05.02.2008 - செவ்வாய்க்கிழமை**

மாலை 3.30 மணிக்கு - கும்ப பூஜை

மாலை 4.30 மணிக்கு - மூலஸ்தான பூஜை

மாலை 5.15 மணிக்கு - வசந்த மண்டபபூஜை

மாலை 6.00 மணிக்கு - அம்பாள் தேரில் ஆரோகணமாகி மின்சார விளக்கினால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அம்பாள் வீதிவலம் வருவார். 7மணியளவில் தேரிலிருந்து அவரோகணம் ஆகுதல் இடம்பெறும்.

*தேரேறும் வேளை வீரமாகாளியே*
*நம் மக்களுக்கு அருள்பாலிக்க வேண்டுமம்மா*

அன்றையதினம் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்களின் தவில், நாதஸ்வரக் கச்சேரி 4 மணி முதல் இடம்பெறும்.

**சி.கமல்ராஜ் குருக்கள்**
பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்

விளம்பர அனுசரணை :
**கிருஸ்ணா ஜுவல்லறி**
*இல.9 கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*

## நெஞ்சகலா நினைவலைகள்

**9ஆம் ஆண்டு**



அமரர் மூத்தார் சின்னத்துரை
*(செல்லமணி)*
(கா.சி.கூ.ஓய்வு பெற்ற ஊழியர்)

மலர்வு 03★09★1929
உதிர்வு 05★12★1998

திதி: திருதிகை 27.11.2007

**5ஆம் ஆண்டு**



திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை
*(சோதி)*

மலர்வு 26★04★1949
உதிர்வு 31★01★2003

திதி: சதுர்த்தசி 05.02.2008

**எம் அன்புத் தெய்வங்கள் இருவரதும் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

நி.மு: இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி.
த.மு: சில்லாலை, பண்டத்தரிப்பு.

என்றும் எம் அன்புத் தெய்வங்களின் நினைவில் வாழும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு* *22 ★ 02 ★ 1922*



*உதிர்வு* *18 ★ 01 ★ 2007*

**திருமதி**

**கணபதிப்பிள்ளை தெய்வானை**

எங்கள் குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*53/7, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* [70783]

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தெற்கின் முடிவு வெட்டவெளிச்சம்

பிரிட்டிஷ், சாம்ராச்சியத்தின் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு அறுபதாவது ஆண்டு நிறைவை அனுஷ்டிக்கும் இலங்கைத் தீவு இந்தக் காலகட்டத்துக்குள் புரையோடிப் புண்ணாகிப் போயிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு ஒன்றைக் காணவேயில்லை. கடந்த மூன்று தசாப்த காலமாகக் கொடூரப் போராக வெடித்திருக்கும் இந்தப் பிணக்கை, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுத் தலைவர்கள் குரங்கின் கைப்புண்ணாக்கி மேலும் மேலும் அதனைப் புரையோட வைத்ததைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

அதற்குத் தாமும் விதிவிலக்கல்லர் என்பதைத் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நிரூபித்து வருகின்றார். அவரது நேற்றைய சுதந்திர தின உரை அதையே உறுதிப்படுத்தி நிற்கின்றது.

புலிகளைப் 'பயங்கரவாதிகள்', 'கொடூரவாதிகள்' என்று சித்திரித்து அவர்களை வென்றுவிட்டோம் என்று மார்தட்டுவதும் அவர்களைக் கூண்டோடு அழிக்கப்போகின்றோம் என்று சூளுரைப்பதும் இதற்கு முன்னரும் இதே பதவியில் அமர்ந்திருந்து, இதேபோன்று சுதந்திரதின உரையை நாட்டு மக்களுக்கு ஆற்றியபோது முன்பிருந்த அரசியல் தலைவர்கள் கூறியவைதாம். தமிழ்ப் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்துவிட்டது என்று கூறி, அதற்குக் காலக்கெடு விதிப்பதும் புதிய விடயமல்ல. ஜனாதிபதியைச் சூழ நின்று போர் முழக்கம் செய்யும் அதிகார வர்க்கம் திரும்பத் திரும்ப கூறிவருவது அதைத்தான். அதன் சாத்தியப்பாடுகள் - முடிவுகள் - எப்படி அமையும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். காலம் பதில் கூறட்டும்.

ஆனால் அதைவிட முக்கியமான விடயம் ஒன்று ஜனாதிபதியின் நேற்றைய உரையின் ஊடாக வெளிப்பட்டிருக்கின்றது. இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் சராசரி சிங்களத் தலைமையின் குத்துக்கரணப் போக்கை அப்படியே அச்சொட்டாகத் தாமும் நிரூபிக்கின்றார் என்பதை இந்த உரை ஊடாக அவர் காட்ட முயன்றிருக்கின்றார்.

தாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துத் தென்னிலங்கையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவார் என்றும் -

இந்த இணக்கப்பாடு குறித்துத் தமிழர் தரப்புடன் பேசித் தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்குவார் என்றும் -

தமது 'மஹிந்த சிந்தனை' மூலம் வாக்குறுதி அளித்தே ஆட்சி அதிகாரத்துக்கு வந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆட்சிக்கு வந்து நீண்ட காலத்துக்குப் பின்னர் இதுபற்றி ஆராய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்றை நியமித்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் நிலைப்பாட்டை அறிவதற்கான அமைப்பு இது என்பதால் இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைக்கவில்லை என்றார். இந்த அமைப்பின் யோசனைத்திட்டம் வெளிவந்ததும் அதனடிப்படையில் தமிழர் தரப்புடன் பேசலாம் என்றார்.

அந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவும் சுமார் ஒன்றரை வருடங்கள் - 62 அமர்வுகளை - பல நூறு மணித்தியாலங்கள் - நடத்தி சற்று முன்நகர்ந்தபோது ஜனாதிபதி அதற்கு முட்டுக்கட்டை போட்டார். இடைக்கால ஏற்பாடாக, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்ற யோசனையை உங்கள் திட்டமாக எனக்குச் சமர்ப்பியுங்கள் என அதற்கு அழுத்தம் போட்டார் அவர். அப்படியே நடந்தது அந்தக் குழு.

'இறுதித் தீர்வு யோசனை பிறகு வரும். இப்போது இடைக்கால ஏற்பாடாக 13 ஆவது திருத்தத்தை, மாகாணசபைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்' - என்று ஜனாதிபதி காட்டிய ஆலோசனையையே, பெருமாள் மாடுபோல தலையாட்டி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவும் தனது யோசனையாகச் சமர்ப்பித்தது.

இந்த நிலையில்தான், அந்த இடைக்காலத் திட்டமே, இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு என்று ஒரேயடியாகத் தமது நேற்றைய பேச்சில் அதிரடி அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

*''நாம் வழங்குகின்ற தீர்வு இந்த நாட்டிலே செயற்படுத்தக் கூடியதொரு தீர்வாக இருக்க வேண்டும். பரீட்சார்த்தமாகத் தீர்வுகளை நாம் வழங்க முடியாது. இரத்தம் சிந்தி, ஆயிரக்கணக்கானோரை இழந்திருக்கும்போது தீர்வுகளைப் பரீட்சார்த்தமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதனால் தான் இந்த நாட்டில் செயற்படுத்தக்கூடிய - எமக்கு அனுபவங்களைத்தந்த - தீர்வொன்றை நாம் தெரிவுசெய்தோம். எமது அரசமைப்புக்கு ஊடாக மாகாண நிர்வாகத்தை மக்களிடம் நெருங்க வைப்பதே அந்த நடைமுறைச் சாத்திய மான தீர்வாகும்.''* - என்று நேற்று நாட்டு மக்களுக்கு தாம் ஆற்றிய சுதந்திர தினச் செய்தியில் பிரகடனப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி.

இதுவே தீர்வுக்கான தமது முடிவு என்ற அவரின் இந்த அறிவிப்பின்படி -

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை - மாகாணசபை அதிகாரப் பகிர்வை - இடைக்கால நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தும்படி கோரி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்த திட்டமே -

✱ இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஜனாதிபதியின் இறுதித் தீர்வாகும்.

✱ இறுதித் தீர்வுத் திட்டம் குறித்து இனித் தமிழர் தரப்புடன் பேசி முடிவெடுக்க அவருக்கு எதுவுமில்லை.

✱ சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இனியும் கூடி, இறுதித் தீர்வு ஒன்று குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை.

✱ அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை 'முதல் காலடி' என்று வர்ணித்த இந்தியாவுக்கு 'அவ்வளவுதான். இதற்கு அப்பால் எந்தக் காலடியும் இல்லை' என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

✱ 'நம்பகத்தன்மையான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றை சமர்ப்பியுங்கள்' - என்று கோரும் சர்வதேச சமூகத்துக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதே அந்த அதிகாரப்பகிர்வு என்பது தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

✱ தற்போதைய அரசமைப்புக்கு வெளியே வரத் தாம் தயார் இல்லை என்பதையும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டவற்றையும் நீர்த்துப்போக வைத்து, நலிந்த ஓர் அதிகாரப் பகிர்வையே தாம் வழங்கத் தயார் என்பதையும் தெளிவு படுத்திவிட்டார் அரசுத் தலைவர்.

தமிழர் தரப்பின் கருத்தை உள்வாங்காமலேயே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது இறுதி முடிவைத் தெளிவுபடுத்தி விட்டார் இலங்கை அரசுத் தலைவர். இனி சர்வதேச சமூகம் என்ன செய்யப்போகிறது? அதன் பிரதிபலிப்பைப் பார்த்திருப்போம்!

# திட்டமிட்டபடி ஜூலை மாத இறுதியில் கண்டியில் 'சார்க்' மாநாடு நடக்குமா?

### அரசியல் - பாதுகாப்பு நிலைவரம் அதற்கு இடமளிக்குமா எனக் கேள்வி

கொழும்பு,பெப்.5

தென்னாசிய நாடுகள் அமைப்பின் (சார்க் அமைப்பின்) உச்சி மாநாட்டை ஜூலை மாதத்தில் நடத்தவுள்ளதாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள அதேவேளை, இலங்கையின் அரசியல் - பாதுகாப்பு சூழ்நிலைகள் இதற்கு ஏதுவாக அமையுமா என்பது குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறைப்படி'சார்க்' மாநாட்டை தன்னுடைய நாட்டில் நடத்தி, அதன் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மாநாடு மத்திய மாகாணத் தலைநகரான கண்டியில் எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மூன்றாம் திகதி வரை நடைபெறுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இலங்கைஅரசு இந்தஉச்சிமாநாட்டை நடத்துவதற்கான சில திகதிகளைக் குறிப்பிட்டு சார்க் செயலகத்திற்கு எழுதியுள்ளது என தெரிவித்துள்ள அதிகாரியொருவர் 'சார்க்' செயலகம் ஒவ்வொரு உறுப்பு நாட்டினது சம்மதத்தையும் பெறவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடொன்றின் தலைவர் இத் திகதியை நிராகரித்தாலோ அல்லது ஏதாவது காரணத்திற்காக அத்திகதியை ஏற்க மறுத்தாலோ உச்சி மாநாடு நடைபெறாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'சார்க்' அமைப்பின் முடிவுகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் ஒத்திசைவுடனேயே எடுக்கப்படுகின்றன. மேலும் அனைத்து உறுப்பு நாடுகளின் தலைவர்களினது பிரசன்னமும் உச்சி மாநாட்டுக்கு மிகவும் அவசியம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு உச்சி மாநாட்டை நடத்துவது குறித்து உறுதியாகவுள்ள போதிலும், இவ்வாறான உச்சி மாநாட்டை நடத்துவதற்கு உகந்த பாதுகாப்பு நிலைவரம் இலங்கையில் அச்சமயம் காணப்படுமா என்பது குறித்து சுயாதீன அரசியல் வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசு யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து ஒரு தலைப்பட்சமாக விலகிய பின்னர் தீவிர யுத்தமொன்றில் ஈடுபடும் மனோநிலையில் அது உள்ளது. இதன் காரணமாக இவ்வருடம் முழுவதும் இலங்கையில் கடும் யுத்தம் இடம்பெறக்கூடிய சாத்தியமே உள்ளது. விடுதலைப் புலிகளும் கடும் எதிர்ப்பை வெளியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் உச்சி மாநாட்டுக்காக வருகை தரும் வெளிநாட்டு தலைவர்களின் பாதுகாப்பை இங்கு உறுதி செய்வது மிகக் கடினமாக அமையலாம் எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் உறுப்பு நாடுகள் அனைத்திலும் கூட குழப்பம் நிலவுவதால், தலைவர்களால் உச்சி மாநாட்டுக்கான திகதி குறித்துத் தீர்மானம், எடுக்க முடியுமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. (சி)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் அனைத்து வகையான இரத்தத்திற்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என இரத்த வங்கியின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.உமாசங்கர் தெரிவித்தார்.

குறிப்பாக A+ இரத்தவகையே தட்டுப்பாடாக உள்ளதாகவும் இரத்ததானம் செய்ய விரும்புபவர்களை உடனடியாக வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இரத்த வகையை அறியாதவர்களும் வைத்தியசாலையில் பரிசோதனை செய்து இரத்தானம் வழங்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

# பாதுகாப்பு நிலைமை மோசமடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும்

கொழும்பு,பெப்.5

உலகில் பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் லெபனான், சோமாலியா, சிம்பாப்வே ஆகிய நாடுகளுடன் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது. பிரச்சினைகள் தொடர்பான சர்வதேச குழு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள கண்காணிப்பு அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உலகில் தற்போது ஏழு நாடுகளில் உள்நாட்டு மோதல்கள் தீவிரமடைந்து, பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்துள்ளன.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை உத்தியோக பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்ததைத் தொடர்ந்து அங்கு இராணுவ நடவடிக்கைகளும் வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

கென்யாவில் இன மோதல்கள் காரணமாக டிசம்பர் 27 முதல் ஜனவரி இறுதிப்பகுதி வரை 900 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இப்பிரச்சினைக்கு முடிவுகட்ட ஐ.நாவின் முன்னாள் செயலாளர் கோபி அனான் தீவிர முயற்சிகளை எடுத்துவருகிறார்.

சாட் மற்றும் சிம்பாவேயிலும் வன்முறைகளும் அரசியல் படுகொலைகளும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. யேமன் நாட்டில் அரச படைகளுக்கும் அப்ஹொத்தி போராளிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. கடந்த ஜூன் மாதம் இரு தரப்புகளுக்குமான போர் நிறுத்தம் முறிவடைந்ததை அடுத்து அங்கு வன்முறைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. லெபனானிலும் வன்முறைகள் அதிகரித்து பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.- என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோத்தபாயவின் உதவியுடனேயே தாம் பிரிட்டனுக்குச் சென்றாராம்

### நீதிமன்றில் கருணா வாக்குமூலம்

கொழும்பு,பெப்.5

எனது பிரித்தானிய பயணத்திற்கான எல்லா உதவிகளையும் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே வழங்கியிருந்ததாகத் துணை ஆயுதக் குழுவின் முன்னாள் தலைவரான கருணா தெரிவித்துள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான ''சண்டே லீடர்'' தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ''சண்டே லீடர்'' வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-

கடந்த வாரம் கருணாவின் வாக்குமூலமானது பிரித்தானியாவின் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டபோது அவரின் பிரித்தானிய பயணத்திற்கு கோத்தபாய ராஜபக்ஷ எவ்வாறு உதவியுள்ளார் என்பது தெளிவாகி உள்ளது. கோத்தபாய ராஜபக்ஷவை கருணா நேரில் சந்தித்து பிரித்தானியாவுக்குச் செலவதற்கு உதவி புரியமாறு கேட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அதற்கு சம்மதித்ததுடன் பிரித்தானியாவுக்கான ஆறுமாத விசாவை தான் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்திருந்தார். அதன்பின்னர் எத்தனை முறை வேண்டுமானாலும் பிரித்தானியாவுக்குப் பயணங்களை மேற்கொள்ளலாம் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என்று தெரிகிறது.

கருணா மேலும் தெரிவித்திருப்பதாவது:- அரசின் முழுப் பாதுகாப்புடன் தான் நான் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். எனக்குத் துணையாகப் படையினரின் புலனாய்வு அதிகாரி ஒருவரும் வந்திருந்தார். அங்கு நான் மிக முக்கிய பிரமுகர்கள் பயன்படுத்தும் வாயிலினூடாக யுஎல்-505 வானூர்தியில் ஏற்றப்பட்டேன்.

பிரித்தானியாவுக்கான விசாவை கோத்தபாய ராஜபக்ஷ பெற்றுத்தருவது தோல்வியில் முடிந்ததும் அவர் எனக்கு இராஜதந்திரிகளுக்கான போலியான கடவுச்சீட்டையும் இராணுவத்தின் பாதுகாப்பையும் வழங்கியிருந்தார். அவரின் பரிந்துரையின் பேரில் தான் முக்கியப் பிரமுகர்கள் செல்லும் பாதையை வானூர்தி நிலையத்தில் பயன்படுத்தியிருந்தேன்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டதில் இருந்து அரசே தமக்கான உதவிகளை வழங்கி வந்தது என்று தெரிவித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வராத்துப்பளையில் தனியார் காணிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

### பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு

பருத்தித்துறை, பெப்.5

பருத்தித்துறை, வராத்துப்பளை கிராமத்தில் தனியார் காணிகளில் சட்ட விரோத மணல் அகழ்வு தீவிரமாக இடம் பெற்று வருவதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மணல் அகழ்வதுடன் அக் காணிகளிலுள்ள பெரிய மரங்களையும் வெட்டுவதாகவும் இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் காணிகளின் உரிமையாளர்களை பயமுறுத்துவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திருட்டு நடவடிக்கைகளைத் தடை செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோர் குறித்து கிராம அலுவலருக்கோ, அல்லது தமக்கோ தகவல் தெரிவிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதே வேளை - அனுமதிப்பத்திரம் பெற்று மண் அகழ்வோரில் சிலர் அம் மண்ணை தனியாருக்குக் கூடுதல் விலையில் விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சியில் குறிப்பிட்ட சில இடங்களிலேயே இந்த நடவடிக்கை இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செற்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. (202-70-118)

## நாளை

| | |
|---|---|
| தை - 23 | புதன்கிழமை 06.02.2008 |
| திதி : அமாவாசை | |
| நட்சத்திரம் : | உத்தராடம் காலை 8.47 வரை |
| அமாவாசை விரதம் | |
| சுபநேரம் : | 05.05 - 06.35 |
| ராகுகாலம் | 12.35 - 02.05 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் சில பாடசாலைகளுக்கு சுகாதாரமற்ற குடிதண்ணீர், உணவு விநியோகம்

## உடன் நடவடிக்கை எடுப்பதாகச் சுகாதார அதிகாரி தெரிவிக்கிறார்


சுகாதாரப் பராமரிப்பற்ற கிணற்றிலிருந்து மாணவர்களுக்கு விநியோகிக்க குடிதண்ணீர் எடுக்கப்படும் காட்சி.

யாழ்ப்பாணம்,பெப்.5

வடமராட்சியில் உள்ள சில பாடசாலைகளுக்கு சுகாதாரமற்ற குடிதண்ணீர், உணவு விநியோகிக்கப்படுவது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என வடமராட்சி சுகாதாரப் பொறுப்பதிகாரி எஸ்.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சில பாடசாலைகளுக்குப் போதிய சுகாதாரப் பராமரிப்பற்ற கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிதண்ணீரே விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் சில பாடசாலைகளில் இலவச உணவு வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் சுகாதார முறைகளில் தயாரிக்கப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. சில பாடசாலைகளில் திறந்தவெளியில் வைத்தே உணவு சமைக்கப்படுகின்றது. இது சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துகின்றது எனப் பெற்றோர் சார்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து வடமராட்சி சுகாதாரப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதனையடுத்து தாம் உடனடி நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் சுகாதாரமான முறையில் மாணவர்களுக்கு குடிதண்ணீரும் உணவும் விநியோகிக்கப்படுவதை தாம் கண்காணித்து உறுதி செய்ய உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-202)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.5

அராலி வானவில் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி துணவி சென்.ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* ஈவினை கலைமகள் பி அணி எதிர் அராலி துணவி சென்.ஸ்ரார் பி அணி
* அராலி சில்வஸ்ரார் ஏ அணி எதிர் ஆனைக்கோட்டை கலைஒளி பி அணி. (203-86)

★ ★ ★

வலி.தென்மேற்கு,பெப்.5

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை சென்.ஹென்றீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* இளவாலை யங்ஹென்றீஸ் வி.க. எதிர் மாதகல் சிம்பென்றீஸ் வி.க.
* சண்டிலிப்பாய் கல்வ்ளை விநாயகர் வி.க. எதிர் மானிப்பாய் றெட் றேஞ்சல் வி.க. (203-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் 16, 18 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (203-86)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.5

அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி சிவரூபி சொக்கலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய நிர்வாக அலுவலர் மா.கதிரமலைப்பிள்ளை, தெல்லிப்பழை கோட்ட நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சுபத்திரா ஆகியோரும் கௌரவ விருந்தினராக கல்வாரி பூரண சுவிசேக தேவாலய போதகர் ஆமோஸ் அன்ரனியும் கலந்து கொள்வர். (203)



வண்ணை

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான

## மின்னெறிஞ்சாள் உற்சவ விஞ்ஞாபனம்

**06.02.2008 புதன்கிழமை**

பி.ப. 3 மணிக்கு கும்ப பூசை

பி.ப. 3.30 மணிமுதல் அபிராமி அந்தாதி ஓதப்பட்டு திருக்கதவும் திறக்கப்பட்டு அபிராமிபட்டருக்கு காட்சி கொடுத்தல் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 5.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் வீதிவலம் வந்து மின்னெறிஞ்சாள் உற்சவம் இடம்பெறும்.

அன்றைய தினம் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்களின் தவில், நாதஸ்வரக் கச்சேரி 3மணி முதல் இடம்பெறும்.

காலை 8 மணிமுதல் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(70820) திருவிழா உபயகாரர்.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் பாடசாலை அபிவிருத்திக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

1ஆம் பரிசு - 0437
2ஆம் பரிசு - 0446
3ஆம் பரிசு - 1996

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3939 | 2. 2195 | 3. 2288 | 4. 3222 |
| 5. 1080 | 6. 1496 | 7. 1061 | |

மு.கு.: இப்பரிசில்களை உரிய சிட்டையுடன் பாடசாலை நேரத்தில் 15.02.2008 இற்கு முன் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/551356) செயலாளர்.

## நீங்காத நினைவுகளுடன் பத்து வருடம்



அமரர்

இராஜசிங்கம் அழகக்கோன் (வேணி)

(யாழ்.மாநகர சபை ஊழியரும் முன்னாள் ஆங்கில ஆசிரியரும்)

மண்ணில் 25 ★ 12 ★ 1948

விண்ணில் 05 ★ 02 ★ 1998

*'உம் சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்'*

*ஆண்டுகள் பத்து ஆனபோதும்*
*எம் இதயங்களில் உமது நினைவோடு வாழ்வோம்*
*அன்புத் தந்தையே ...*
*அன்பான வார்த்தைகளாலும் பாசமான அரவணைப்பாலும்*
*எம்மை வளர்த்தீர் எமக்கெல்லாம் கலங்கரை விளக்கானீர்*
*வாழ்வது ஒருமுறை உம்மை வர்ழ்த்தட்டும் தலைமுறை.*

No.15, ஆறாம் குறுக்குத்தெரு, குருநகர்.

உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(70824)



சிவமயம்

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

### "அம்பாள் அறிவாலயத்" திறப்பு விழாவும் அபிராமிப்பட்டர் விழாவும்

நாளை (06.02.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணி

**நிகழ்ச்சி நிரல்**

தலைவர்: திருமிகு. கா.ஆ.தியாகராசா அவர்கள்
*(இளைப்பாறிய உ.அ.அதிபர், தலைவர், அறங்காவலர் சபை)*
மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்: திருமிகு. சி.தனபாலசிங்கம் *(அறங்காவலர்)*
"அம்பாள் அறிவாலயம்" திறந்து வைத்தல்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
*(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)*
பெயர்ப்பலகை திரைநீக்கம்: பேராசிரியர் கலாநிதி கா.குகபாலன் அவர்கள்
வரவேற்புரை: திருமிகு. க.ஜீவசீலன் அவர்கள் *(பொருளாளர், அறங்காவலர் சபை)*
*(பிரதி அதிபர், நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தி.)*
ஆசியுரைகள்: சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் *(தேவஸ்தான ஆதீனகுரு)*
சிவஸ்ரீ சு.பாலசுந்தரக்குருக்கள் *(தேவஸ்தான ஆதீனகுரு)*
சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள் *(தேவஸ்தான ஆதீனகுரு)*
சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் *(தேவஸ்தான உற்சவகுரு)*
தலைமையுரை
அறிவாலயத்திற்கான முதல் நூல் தொகுதிகள் வழங்குதல்
திருமிகு. ப.க.பரமலிங்கம் *(தலைவர், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு)*
நூல்கள் அன்பளிப்பு: பிரமுகர்கள்
பெற்றுக்கொள்பவர்: கலாநிதி மா.வேதநாதன் அவர்கள் *(தலைவர், இந்து நாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)*
போட்டோப் பிரதி இயந்திரம் இயக்கி வைத்தல்: திருமிகு த.சிவானந்தராசா அவர்கள்
*(முகாமையாளர் இ.மி.ச.)*
சிறப்புரை: திருமிகு. க.நாகேஸ்வரன் அவர்கள் J.P., (M.A) *(அறங்காவலர்)*
*(சிரேஸ்ட விரிவுரையாளர், சப்பிரகமுவா பல்கலைக்கழகம்)*
திருமிகு. க.உருத்திரகுமாரன் அவர்கள் J.P., (B.A) *(அறங்காவலர்)*
திருமதி த.சபாநாதன் அவர்கள் *(அறங்காவலர்) (ஓய்வுபெற்ற அதிபர்)*
ஆய்வுப் பேருரை: அபிராமி அந்தாதி திருமிகு. சிவமகாலிங்கம் அவர்கள்
*(இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர்)*
சிறப்புரைகள்: பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள்
நன்றியுரை: திருமிகு. கு.சரவணபவானந்தன் அவர்கள் J.P., (B.A., P.G.D)
*(செயலாளர், அறங்காவலர் சபை) (கோட்டக் கல்விப்பணிப்பாளர், வேலணை)*
இறைவணக்கம்: திருமிகு. ச.தர்மராசா அவர்கள் *(அறங்காவலர்)*
நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பு: திருமிகு. சி.தனபாலசிங்கம் *(அறங்காவலர்)*
திருமிகு. இ.யோகநாதன் *(அறங்காவலர்)*
திருமிகு. ச.தருமராசா *(அறங்காவலர்)*
நூலக ஒழுங்கமைப்பு: திருமதி மைதிலி விசாகருபன் அவர்கள்
*(உதவி நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அறங்காவலர் சபை,
*ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.*

01.02.2008 (சி/551355)

## தவறிவிட்டது

99/4, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த தர்மலிங்கம் விஜயகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (760693570V) 30.01.2008 அன்று யாழ்.பிரதேச செயலகத்திற்கும் சோமசுந்தரம் அவெனியூவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தற்போதைய தேவை கருதி மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.


யாழ்நகரில் முதன் முறையாக
Microsoft MCSE
Certified System Engineers
MCP MCTS MCSE MCSA
மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

* MCS நிறுவனம், உலகப்பிரசித்தி பெற்ற MICROSOFT நிறுவனத்தின் கணனி வலையமைப்பிற்கான (Computer Networking) Microsoft Certified System Engineer [MCSE] கற்கை நெறியை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.
* பரீட்சைகள் MICROSOFT நிறுவனத்தினால் MCS நிறுவனத்தில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் MICROSOFT நிறுவன அதிபர் Bill Gates இனால் வழங்கப்படுகின்றது.
* பல்வேறு கட்டங்களாக தொடரக்கூடிய இக்கற்கை நெறியில் முதலாவது Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified Professional [MCP] சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மேலும் 6 Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified System Engineer [MCSE] சான்றிதழும் வழங்கப்படுகிறது
* வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் வேலைவாய்ப்புக்களைக் கொண்டுள்ள Network Manager, System Administrator ஆகிய துறைகளுக்கு MCSE, MCSA தகுதி பெற்றோரே தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் MCSE தகுதி பெற்றோருக்கு விசா நடைமுறைகளின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது
* வெளிநாடுகளில் 7 x (225+400))$US செலவாகும் மைக்ரோசொப்ற் பொறியியலாளர் கற்கை நெறியை இலங்கையில் மிகக்குறைந்த செலவில் கற்கும் சந்தர்ப்பம்.




மேலதிக விபரங்களிற்கு, நேரில்
Mobile@net Computer Services (MCS),
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண நிர்வாக முறைமையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

அவர் தமது உரையில் கூறியவை வருமாறு:-

அறுபதாவது சுதந்திர தினத்தை நினைவுகூரு வதற்கு ஒன்றுகூடியுள்ள எனது நண்பர்களே!

அறுபதாவது சுதந்திர தினத்தை பெருமையுடன் நினைவுகூர இவ்வுலகில் இருக்கின்ற மகத்துவமிக்க தேசத்தவர் என்ற வகையிலே நாம் இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளில் சாட்சிகளாக இருக்கின்றோம். இன்றைய வீரர்களைப்போன்று சரித்திரம் முழுவதிலும் எமது முனனோர்கள் செய்த அர்ப்பணிப்புக்களினால் இந்த பெருமையையும் மகத்துவத்தையும் இலங்கைத் தேசத்தவர் என்ற வகையில் நாம் பெற்றுக்கொண்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். சுதந்திரத்தின் முதலாவது நன்றியறிதல் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட வேண்டும். அதேபோன்று, முழு நாட்டினதும் உயிர்த்தியாகத்திலிருந்து வியர்வைத் தியாகம்வரை அதியுயர்ந்த அர்ப்பணிப்பைச் செய்த வீரர்களுக்கு தலைவணங்கி கௌரவம் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொளகின்றேன்.

நண்பர்களே,

சுதந்திரம் எனப்படுவதை நாளுக்குநாள் அர்த்துபுஷ்டியாக்கிக் கொள்ளவேண்டும் என நான் நம்புகின்றேன். அதேபோன்று சுதந்திரத்தை அர்த்தபுஷ்டியாக்குவதற்கு தீர்க்கமான விதத் தில் அர்ப்பணிப்பு மேற்கொள்ளப்படுகின்ற யுகத்திலே நாம் உள்ளோம் எனபதையும் இச்சந்தர்ப்பதில் குறிப்பிடவேண்டும்.

பயங்கரவாதத்தைத் தோல்வியுறச் செய்தல், நாட்டின் அபிவிருத்தி, இனங்களுக்கிடையே நம்பிக் கையை உறுதிப்படுத்துதல் இவையனைத்துமே சுதந்திரத்தை அர்த்தபுஷ்டியாக்குவதற்கான முக்கிய நடவடிக்கைகள் என நான் காண்கின்றேன்.

மாவிலாறு அணைக்கட்டை மீட்டெடுத்து அதிலிருந்து விடுவிக்கப்படுகின்ற ஒவ்வொரு நீர்த் துளியைப்போன்று, நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற தொனிப் பொருளில் கிராமத்தில் நாட்டப்படுகின்ற பயிர்க்கன்றும் இந்த நாட்டின் சுயாதீனத்துக்கும் சுதந்திரத்துக்கும் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய நடவடிக்கை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு தேசம் என்ற வகையில் சுதந்திரத்தை அர்த்த புஷ்டியுள்ளதாக்க நடவடிக்கை மேற்கொள்கின்ற நாம், இந்த இரண்டு வருடங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட மிக முக்கியமான, தீர்க்கமான ஒன்று உண்டு. நாட்டில் நன்மையை, அதாவது அபிவிருத்தியை அளக்கின்ற அளவுகோல்களுக்கிடையே இது காலவரை வராத முக்கியமான சுட்டியொன்றை நாம் ஏற்படுத்தியுள்ளோம். அது, எதிர்காலத்தில் மன்னார் கடலில் பெறப்படவுள்ள எண்ணெய்வளத்தைப் போன்று, நுரைச்சோலை, மேல் கொத்மலை ஆகிய மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படவுள்ள மின் சாரத்தைப் போன்று எமது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதொன்று. அது வேறொன்றுமல்ல, தற்போது இந்நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நாட்டைப் பற்றிய உணர்வும், பற்றும்தான்.

இந்நாட்டு மக்கள் தற்போது நாட்டின்மீது வைத்துள்ள பற்றை, அரசியல் கட்சிபேதங்களுக்கும், அரசியல் தேவைகளுக்கும் அடிமையாவதற்கு இடமளிக்காமல், நேர்மையுடன் அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதே எம் முன் உள்ள பாரிய சவாலென நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எமது போட்டி இருக்க வேண்டியது, எங்களுக்குத் தலைமைத்துவம் வழங்குகின்ற கட்சிகளுக்கு இடையே அல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியிலும் அல்ல. பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதங்களுக்கு மத்தியிலும் அல்ல. நண்பர்களே, எமது போட்டி இருக்க வேண்டியது,கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையிலேதான். சரி, பிழைகளுக்கிடையிலேதான். பகைமைக்கும் கருணைக்கும் இடையிலேதான்.

நண்பர்களே, சுதந்திரம் பெற்று ஆறு தசாப்தங்கள் கடந்துவிட்டாலும் அதில் மூன்று தசாப்தங்கள மிகவும் பரிதாபகரமான, சாபக்கேடான பயங்கரவாதத்துடனும் கோரமான அனுபவங்களுடனும் வாழவேண்டிய நிலை இலங்கை மக்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக நாம் இழந்த உயிர்கள், உடைமைகள், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்கா. ஆனாலும், தற்போது, முன்னேற்றமடைந்த உலகத்தின் ஏனைய நாடுகளைப் பார்த்துக்கொண்டு அரசியல்வாதிகளுக்கும் பிறந்த நாட்டுக்கும் குறை கூறிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் இருப்பதைவிட, இழந்துவிட்ட சந்தர்ப்பங்களை மீண்டும் உருவாக்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். நாட்டைப் பற்றிக் குறைகூறிக்கொண்டும், இழந்துபோன சந்தர்ப்பங்கள்பற்றி பெருமூச்சுவிட்டுக்கொண்டும் இருப்பது நாட்டுக்குச் செய்கின்ற துரோகமாகவும், காட்டிக்கொடுக்கும் தன்மையாகவும் கருதவேண்டிய காலம் வந்துவிட்டது. சுதந்திரத்துக்கு முன்னர் சிங்கப்பூர், அந்த நாடு, இந்த நாடு இருந்த இடத்தையும், தற்போது நாம் இருக்கும் இடத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் அர்த்தம் உண்டா? ஒரே தேசத்தவா என்ற வகையில் காலங்கடந்தவைகளைப் பற்றி திரும்பத்திரும்பப் பார்ப்பதை நாம் நிறுத்திவிட வேண்டும்.

பயங்கரவாதத்தைத் தோல்வியடையச் செய்து நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதே சரித்திரம் எமது காலடிக்குக் கொண்டுவந்துள்ள சவாலாகும். இந்தச் சவாலை ஏற்றுக் கொண்ட சில அரசாங்கங்கள் மிகவும் குறுகிய காலத்தில் இச் சவால்களை எதிர்நோக்கி, பின்னர் அதை எதிர்கொள்ளமுடியாமல் அந்தச் சுமையை அடுத்த அரசாங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டி நேர்ந்ததை நீங்கள் அறிவீர்கள்.

என்றாலும் நண்பர்களே, கடந்த இரண்டு வருட காலத்திற்குள் நாங்கள் இந்தச் சவாலைத் தட்டிக் கழிக்காமல் அதற்கு நேரடியாக முகம் கொடுத்தோம். சரித்திரத்தில் ஒருநாளும் பெற்றுக்கொள்ளாத வெற்றியை பயங்கரவாதத்துக்கு எதிராக எமது பாதுகாப்புப் படையினர் பெற்றுக்கொண்டிருக்கினறார்கள். சரித்திரத்தில் ஒருநாளும் பெறாத தோலவியை பயங்கரவாதம் இன்று பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இரண்டு வருடங்கள் கழிவதற்கு முன்னதாகவே பயங்கரவாதிகளின் பிடிக்குள் இருந்த கிழக்குப் பிரதேசத்தின் பெருமளவிலான பகுதிகளை நாம் விடுவித்துள்ளதுடன், இரண்டு மாவட்டங்களில் மாத்திரமே இன்று பயங்கரவாதம் நிலவுகின்றது. ஆனாலும் நண்பர்களே, இந்த வெற்றி தென்னிலங்கை மக்களுக்கு மாத்திரம் கிடைத்த வெற்றியாக இருக்க முடியாது. இது தென்னிலங்கை மக்களின் வெற்றியாகும்பொழுது வடபுல மக்களுக்கு இதனை நாம் பெருவெற்றியாக்க வேண்டும். பயங்கரவாதம் தோல்வியடைவதன் மூலம் தென்னிலங்கை மக்கள் ஆறுதல் அடையும் போது, வடபுல மக்களுக்கு அது மிகப்பெரும் ஆறுதலாக இருக்கவேண்டும்.

ஏற்கனவே, பயங்கரவாதத்திலிருந்து நாம் விடுவித்த கிழக்கிலங்கை மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பல்துலக்குவதற்கும், சாப்பிடுவதற்கும் மாத்திரமே தமது வாய்களைத் திறநத மக்களுக்கு, தமது விருப்பத்தின் பிரகாரம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற, ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துகின்ற தேர்தலையும் நாம் விரைவுபடுத்த உள்ளோம்.

அதுமாத்திரமல்ல, பயங்கரவாதிகளின் கப்பம் கோரல்களுக்கு அடிமையாகிய அப் பகுதியை, நாம் வரைவில் அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வோம்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி வேகம், பயங்கரவாதிகளின் கோட்டைகள் இடிந்து விழுவதைப் பார்க்கிலும் வேகமானதென்பதை நீங்கள் அறிவீர்கள். மின்சாரம், குடிதண்ணீர், குடிமனைகள், பாதைகள், பாடசாலைகள் ஆகியவற்றின் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற மக்களை பெருவெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதே எமது தேவை.

### அதேபோன்றுதான் அரசியல் தீர்வும

நண்பர்களே, ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு மாத்திரம் அனுபவிப்பதற்காக நாம்சுதந் திரத்தைப் பெறவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த சுதந்திரப் போராட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் அனைவரும் இருந்தார்கள். அன்று, பிரிவுபட்ட நாட்டுக்காக எமக்குச் சுதந்திரம் தேவைப்படவில்லை. ஒரே நாட்டுக்காக சுதந்திரம் பெறுவதே எமது தேவையாக இருந்தது.

இந்த நாட்டுக்கு முழுமையான சுதந்திரம் பெற் றுத்தர வேண்டுமென முதலில் பிரேரித்த யாழ்ப்பாணம் இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. ஹன்டி பேரின்பநாயகம் எனும் இளைஞர் முதல், டாக்டர் ரி.பீ.ஜாயாவைப் போன்று, அதோ அந்த ஜனாதிபதி செயலகவளவில் சிலைகொண்டுள்ள சேர் பொன்னம்பலம் இராமநாதன் வரை எல்லா இனத்தையும் சேர்ந்தவர்கள் இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்றார்கள்.

இன்று அப்படியான வீரர்கள் உருவாகுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமையே பெரும் பிர்ச்சினையாக உள்ளது. ஒரே நாட்டுக்காகச் சுதந்திரம் பெறுவதற்குப் போராடும் வீரர்கள் இன்று இருப்பார்களேயானால், அவர்கள் அனைவரும் எல்.ரீ.ரீ.ஈ யினரின் துபபாக்கிக்குப் பலியாவார்கள். எனவே, நாம் வடக்கையும் பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கும் அதே வேளை, அப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அரசியல் தீர்வையும், அரசியல் சுதந்திரத்தையும் பெற்றுக்கொடுப்போம்.

அப்படிச் செய்தால் மாத்திரமே அன்று சுதந்திரப் போராட்டத்தின்போது நாட்டைப்பற்றிச் சிந்தித்த வீரர்களைப்போன்ற வீரர்கள் வடக்கி லிருந்தும் கிழக்கிலிருந்தும் தோன்றுவார்கள். ஒற்றையாட்சி கொண்ட நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்வதற்காகவே நாம் அந்த அர்ப்பணிப்பைச் செய்கின்றோம்.

நண்பர்களே, நாம் வழங்குகின்ற தீர்வு இந்த நாடடிலே செயற்படுத்தக்கூடியதொரு தீர்வாக இருக்க வேண்டும். பரீட்சார்த்தமான தீர்வுகளை நாம் வழங்கமுடியாது. இரத்தம் சிந்தி, ஆயிரக்கணக் கானோரை இழந்திருக்கும்போது தீர்வுகளைப் பரீட்சார்த்தமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதனால்தான் இந்த நாட்டில் செயற்படுத்தக் கூடிய, எமக்கு [illegible] தீர்வொன்றை நாம் தெரிவுசெய்தோம். எமது அரசமைப்புக்கூடாக மாகாண நிருவாகத்தை மக்களிடம் நெருங்கவைப்பதே அந்த நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும்.

நண்பர்களே, எமக்கு இந்த விடயத்தில் உலகத்திற்கு முன்மாதிரியொன்றைக் காட்டுவதற்கான சிறந்த சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளது.

மேற்கத்தைய நாடுகளுடன் மோஸ்தரில் பழகும் கொள்கை எம்மிடம் இல்லை. அந்த நாடுகளுடன் போலியற்ற உண்மையான தொடர்புகளையே நாம் வைத்துள்ளோம்.

எமது அண்டைய நாடுகள், அரேபிய நாடுகள, பௌத்த நாடுகள் என்பவற்றுடன் நாம் புதிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அண்டைய நாடுகள் எம்மை நம்புகின்றன. நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அண்டைய நாடுகளுக்கும் பிரச்சினைகளாக அமைந்துள்ளன.

### சர்வதேச சமூகம் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை சிறிதளவும் குறையவில்லை.

மோஸ்தர் அடிப்படையில் சர்வதேச தொடர்புகளை வைத்திருப்பவர்கள் எமது நாட்டு மக்களைப் பற்றி என்னதான் சொன்னாலும், கடந்த காலங்களில் எமக்குக் கிடைத்த உதவிகளில் எந்தவித குறைவும் ஏற்படவில்லை. நாம் அந்த உதவிகளை வெறுமனே பெற்றுக் கொள்ளாமல் எமது நாட்டின் அபிவிருத்திக்கு உகந்த வகையில் பெற்றுக் கொணடுள்ளோம். சர்வதேச பயங்கரவாதத்துக்கு இலங்கை யில் ஒரு முற்றுப்புள்ளி விழும் என்பதை பண்பாடுள்ள உலகமே இன்று ஏற்றுக்கொண்டுள்ளது.

உலகத்தின் கொடூரமான பயங்கரவாதிகள் இலங்கையில் தோல்வியடைகின்றார்கள் என்பது, பயங்கரவாதத்தினால் அடிவிழுகின்ற முன்னேற்றமடைந்த சர்வதேசத்தினதும் வெற்றியாகும். அதே போன்று மனித உரிமைகளையும் பாதுகாத்து இப போராட்டத்தில் ஈடுபட நாம் முழுமையாக எம்மை அர்ப்பணித்துள்ளோம். அதுதான் யதார்த்தம்.

நண்பர்களே, எல்லா அரசாங்கங்களும் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை ஒரு வருடம் கழிவதற்கு முன்னதாகவே மறந்துவிட வேண்டி ஏற்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதற்கான காரணம் அக்கொள்கைகள் இந்த நாட்டின் யதார்த்தத்துக்குப் பொருத்தமானவையாக இருக்கவில்லை. அன்றேல், மக்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவுதான் கிடைத்தாலும் அவை களைச் செயற்படுத்துவதற்கு நெஞ்சுறுதி இருக்க வில்லை. இல்லாவிட்டால் அர்ப்பணிப்புத் தன்மை இருக்கவில்லை.

ஆயினும், நாம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த நாட்டு மக்கள் வாக்களித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்தவற்றை இரு ஆண்டினுள் நாம் செயற்படுத்தியுள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். போதைக்கு முற்றுப்புள்ளிவைத்தல், புதிய மதுபானச் சாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்காமை, பொது இடங்களில் புகைபிடிப்பதைத் தடை செய்தல் போன்ற பல பிரச்சினைகளுக்குள்ளான விடயங்களை எம்மால் செய்ய முடியாமல் போகும் எனப் பலர் நினைத்தார்கள். அரச நிறுவனங்களை விற்றுவிடாமல் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது, இது உலக பொருளாதார நியதி எனவும் நம்பினார்கள். ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொலை செய்கின்ற பயங்கரவாதிகளை, பயங்கரவாதிகள் என்று அழைப்பதும் பயங்கரமான விதிக்கு இரையாவதற்கு இட்டுச் செல்கின்ற காரணம் எனவும் நம்பினார்கள். சுருங்கச்சொல்லப்போனால் இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் பயங்கர வாதிகளைத் தோல்வியடையச் செய்யமுடியும் எனயாரும் நம்பவில்லை. என்றாலும் இவையனைத்தையும் கடந்த இரண்டு வருடங்களுக்குள் எமது தாய்நாட்டில் யதார்த்தமாக்கி விட்டோம்.

மக்கள் வாக்களித்த மஹிந்த சிந்தனையை நாம் கைவிடவில்லை. கைவிடப்போவதும் இல்லை. எனவே, இந்நாட்டின் பெரும்பாலான மக்களின் ஆணையை நாம் தொடர்ந்தும் பாதுகாக்கின்றோம் என்பதைச் சொல்ல வேண்டும்.

அதேபோன்று தீர்க்க முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டு புரையோடிப்போயிருந்த பல பிரச்சினைகளை கடந்த இரண்டு வருடங்களுக்குள் நாம் தீர்க்கக்கூடியதாக இருந்தது. இப்பிரச்சினைகளின் தீர்வுடன் நாட்டின் சுயாதீனமும் பின்னிப்பிணைந்துள்ளதென்பதை புதிதாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சுகாதாரம், கல்வியைப் போன்று தேசியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதானது, நன்மை பயக்கின்ற எதிர்காலத்திற்கும் சுயாதீன மான நாட்டுக்கும் வழிவகுக்கும்.

இன்று கிராமமொன்று இருக்கின்றதென்பதையும், கிராமங்கள் எழுச்சி பெறுகின்றனவென்பதையும் முழு நாடே அறிந்துள்ளது. மூடுவிழா கண்ட துலிகிரிய போன்ற கைத்தொழில் நிறுவனங்களை நாம திறந்துவைத் [illegible]ச்சினைகொண்ட இ.போ.ச பஸ்வண்டிகள் பாதைக்கு வந்துள்ளன. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் உட்பட கூட்டுறவு இயக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. முன்னேற்றமடைந்த மேற்கத்தைய நாடுகளில் மட்டுமே இருந்த கொங்கிறீட் பாதைகள் ஆயிரக் கணக்கில் தூரக் கிராமங்களில் போடப்பட்டுள்ளன. தோட்டப் புறங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் புதிய வீடுகளில் குடிபுகுந்துள்ளனர். குடிதண்ணீர் திட்டங்கள், ஒவ்வொரு கிராமத்திற்கும் புதிய நீர்த்தாங்கிகள் ஆகியவற்றை நாம் தற்போது காணமுடியும். ஏகாதி பத்திபவாதிகளின் காலத்திற்குப் பிறகு எமது நாடு புதிய சர்வதேச விமான நிலையமொன்றையும் புதிய சர்வதேச துறைமுகமொன்றையும் நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளது.

மேம்பாலங்களும், நூற்றுக்கணக்கான பாலங்களும் நெடுஞ்சாலைகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. இப்பாலங்கள் அனைத்தும் நம்நாட்டுப் பொறியியலாளர்களினால் நிர்மாணிக்கப்படுகின்றன. வாவிகளை நிர்மாணித்த எமது நாட்டில், எமது அணைக்கட்டுகளைக் கண்காணிப்பதற்கும் அன்று வெளிநாட்டு நிபுணர்களுக்குக் கொந்தராத்து வழங் கப்பட்டது. இப்போது எமது இலங்கை நாட்டின் பொறியியலாளர்கள் மொரகஹகந்த, தெதுரு ஓயா, வெஹெரகல போன்ற பாரிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கின்றனர்.

கறுவா விளையும்போதும், வெற்றிலை தளிர் விடும்போதும், சோளம் பூத்து விரியும் போதும், நெறகதிர்கள் அசைந்தாடும்போதும் விவசாயிகளுக்கு பூரித்துச் சிரிக்கக்கூடிய நாடொன்றை நாம் கட்டி யெழுப்பி வருகின்றோம். மதகுருமார்களே, தமது கைகளால் பாதைகள், வாவிகள் நிர்மாணிக்கப் படும் போது, தமது விளைச்சல்களுக்கு நல்லதோர் விலை கிடைக்கும்போது, எமது உணவுகளையே நாம் பயன்படுத்தும்போது, நாம் இந்த நாட்டில் வாடகைக்கு இருப்பவர்கள் அல்லர், இது எமது நாடு என்ற உணர்வு எமது மக்களுக்கு ஏற்படுகின்றது.

முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப உலகத்துடன் கைகோத்துக் கொள்வதற்கான எல்லாச் சந்தர்ப்பங்களையும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

நாம் பறைசாற்றாவிட்டாலும் கணனி அறிவு முக்கியமல்லாதிருந்த எமது நாட்டில், இன்று நூற்றுக்கு 25 வீதம்வரை அதனை அதிகரிப்பதில், நாம் வெற்றிகண்டுள்ளோம். 30 வருடங்களுக்குப் பின்னர் நூற்றுக்கு 7 வீதம் வரையிலான பொருளாதார அபிவிருத்தியை கடந்த இரண்டு வருடங்களில் நாம் பெற்றுக் கொண்டோம்.

இந்த வெற்றியை முன்னெடுத்துச் செல்வதே எமது தேவை. இதனை முன்னெடுத்துச் செல்வது, அடிமையாக, பயத்துடன், கப்பம் கொடுக்கின்ற நாடாக அல்ல, எமது நாடு, எமது தன்மை, எமது சுயாதீனம் ஆகியவற்றைப் பாதுகாத்துக்கொண்டுதான் இதனைச் செய்வோம். எந்தவிதமான கஷ்டங்கள் வந்தாலும் நாம் எமது தாய்நாட்டைக் காட்டிக்கொடுக்கமாட்டோம்.

உலக உணவுப் பற்றாக்குறை, எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் சுமையினால் உலக மக்களைப் போன்று எமது மக்களும் கஷ்டப்படுகின்றார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆனாலும் மிகவும் கடினமான வெற்றியை எமது தாய்நாட்டில் உறுதிப்படுத்திய அரசின் தலைவன் என்ற வகையில், இந்தக் கஷ்டங்கள் நிரந்தர மானவை அல்ல என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். நிரந்தரமற்றவையாக மாத்திரமல்ல, இவைகளை நீண்டகால கஷ்டங்களாக ஆக்குவதற்கும் இடமளிக்க மாட்டேன் என்பதை பொறுப்புடன் நான் கூறுகின்றேன்.

குறுகியகால கஷ்டங்கள் நீண்டகால நன்மைக்கும், நன்மையான அடிமைத்தனையற்ற வாழ்க்கைக்கும் வழிவகுக்கும் என்பதைக் கூற வேண்டும்.

எமது நாட்டை உலகத்தில் முக்கியமானதொரு இடத்தில் உயர்த்தி வைப்பதற்கான முயற்சியின் காரணமாக அனுபவிக்கின்ற கஷ்டங்களை நாம புரிந்துள்ளோம். எமது தாய் நாட்டை போனறு பலமடங்கு விசாலமான கடல்வளத்தைப் பயன்படுத்துகின்ற நாடாக உருவாக்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். நம்நாட்டின் வளங்களிலிருந்து ஆகக்கூடிய நன்மைகளைப் பெறக்கூடிய சமுதாயமொன்றை உருவாக்குவதற்கும் நாம் ஆயத்தமாக உள்ளோம்.

விண்ணிலும், மண்ணிலும், மலையிலும், கடலோரங்களிலும் இருக்கின்ற அழகை ஆகக கூடியளவு பயன்படுத்தும் பணிகள் எமக்கு உள்ளன. ஒவ்வொரு அங்குலக்காணியிலும் விளைச்சலை மேற்கொண்டு, அடிமையற்ற தேசமொன் றுக்குத் தேவையான வளங்களை உருவாக்கிக் கொள்ளும் பாரிய பணிகள் எமக்கு உள்ளன. இந்தப் பணிகளை நிறைவேற்ற எமது இலங்கை மக்களுக்கு பலம் உண்டென நான் நம்புகின்றேன். உங்களுடைய இந்த உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு எமது தாய்நாட்டில் அடிமைத்தனையற்ற சுயாதீனமான் தேசத்தவர்களை உருவாக்கும்.

உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் பிறக்கட்டும்! - என்றார் அவர். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நேற்றைய சுதந்திரதின நிகழ்வுகளில் பல்குழல் ஏவுகணைகளின் அணிவகுப்பையும் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார் அணிவகுத்து செல்வதையும் படங்களில் காணலாம்.

# மனித இறைமையை மதிப்பதன் மூலமே பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியும்

## ஐ.தே.கவின் சுதந்திரதின விழாவில் ரணில் கருத்து

''மனித உரிமைகளையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாத்து மக்களின் இறைமைக்கு இடமளிப்பதன் மூலம்தான் பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியும்.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

நேற்றுக் கண்டியில் ஈ.எல். சேனநாயக்க சிறுவர் பொதுநூலகத்தில் நடைபெற்ற இலங்கையின் 60 ஆவது சுதந்திர தின நிக்ழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஏகாதிபத்திய ரீதியில் செயற்பட்டு ஜனநாயகத்தை அடக்கி ஒடுக்க முற்பட்டால் நாடு ஒருபோதும் நலம் பெறாது.

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ, ஒரு கொள்கையைக் கொண்டவர்கள் என்பதற்காகவோ அவர்களைக் கைது செய்வதும் , கப்பம் பெறுவதும் அடக்குவதும், ஒடுக்குவதும் தவறான நடவடிக்கையாகும் - என்றார்.

இந்த நிகழ்விற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (சி)

# கோட்டைச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

கொழும்பு,பெப்.05

கொழும்பு,கோட்டை ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்திருக்கிறது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு, தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த கொழும்பு, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி மாணவர்கள் இருவரே சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்திருக்கின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி மாணவர்கள் 6 பேர் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் எனவும், சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும், அவர்களில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் மேலும் தெரிவித்தன. (சி)

# கிஷோர் எம்.பி. வீட்டுக்கு நேற்றிரவு கிரனேட் வீச்சு

வவுனியா, பெப். 05

வவுனியா, இறம்பைக் குளத்தில் அமைந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் வீட்டின் மீது நேற்று முன்இரவு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு வந்த அடையாளந்தெரியாத இளைஞர் ஒருவர் வீட்டின் மீது கிரனேட்டை வீசி விட்டுத் தப்பிச் சென்றார் என்றும், கிரனேட் வீட்டின் வளவில் வீழ்ந்து வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து கிஷோர் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

குறித்த நபர் எப்படி வந்தார் - எங்கிருந்து வந்தார் என்பது எனக்குத் தெரியாது. அவர் வீசிய கிரனேட் வெடித்ததில் வீட்டின் முன்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் காவலரணுக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

படையினரின் காவலரண்கள் வீட்டின் இரு மருங்கிலும் அமைந்திருந்த போதும் வீட்டின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது - என்றார். (சி)

# நுகேகொடையில் 17 தமிழர்கள் கைது

கொழும்பு,பெப்.05

கொழும்பு புறநகர்ப் பகுதியான நுகேகொடைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்தின்பேரில் 17 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இப்பகுதியில் குண்டு மீட்கப்பட்டதையடுத்தே இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுக்காலைவரை இடம்பெற்ற தேடுதலில் 300 வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அத்துடன், எண்ணாயிரம் பேரும் சோதனைக்கு ஆளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## குடாநாட்டின் பல்வேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வீதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றில் சென்ற பொதுமக்களுக்கு இராணுவத்தினர் தேசியக் கொடிகளை வழங்கினார்கள். இதனையடுத்து அவற்றிலும் தேசியக் கொடிகள் ஒட்டப்பட்டிருந்தன.

யாழ். நகரப்பகுதி உட்பட குடாநாட்டின் சகல இடங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்களிலும் நேற்றுத் தேசியக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

நேற்று பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் மினிபஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களிலும் தேசியக் கொடிகள் ஒட்டப்பட்டிருந்தன.

**கஸ்தூரியார் வீதியில்**

யாழ். நகரக் கடைகளிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. யாழ். கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, கஸ்தூரியார் வீதிகளின் இரு மருங்குகளிலும் உள்ள வீடுகளிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதேவேளை 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்குள் பிரவேசித்த இராணுவத்தினர் இலங்கையின் தேசியக் கொடியை தாமாகவே கட்டிச் சென்றனர்.

சுதந்திர தினத்தையொட்டி நேற்று குடாநாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர். வாகனங்களும் கடுமையாகச் சோதனையிடப்பட்டன. அத்துடன் வீதிகளில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. குடாநாட்டில் பொதுவாக எல்லா இடங்களிலும் நேற்று மக்கள் நடமாட்டம் மிக மிகக் குறைவாகவே இருந்தது.

**வடமராட்சியில்**

வடமராட்சியில் தேசியக் கொடிகள் அரச திணைக்களங்கள், படைமுகாம்களில் ஏற்றப்பட்டிருந்தன. வல்லையில் அமைந்துள்ள சோதனை நிலையத்தில் பெரியளவில் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

உடுப்பிட்டி, குஞ்சர்கடை, நாவலர்மடம், புலோலி, மந்திகை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

வடமராட்சியில் உள்ள பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்களில் அணிவகுப்பு மரியாதைகளும் இடம்பெற்றன.

மக்கள் நடமாட்டம் வீதிகளில் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

**• வலி. வடக்கில்**

வலிகாமத்தில் தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய் பிரதேசங்களிலும் தேசியக் கொடி ஏற்றல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

சுதந்திரதினத்தை ஒட்டி காங்கேசன் துறையில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் இடம்பெறவில்லை. அதன் காரணமாக அங்கு ஊழியர்கள் தெல்லிப்பழை சோதனை நிலையம் ஊடாகச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(அ-1-50-86-79-155)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மன்னார் சௌத்பார் மற்றும் வங்காலையிலுள்ள படையினரின் முகாம்களிலிருந்து நேற்றுக்காலை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் வீச்சுகளை மேற்கொண்டனர் என்றும் கூறப்பட்டது. எனினும், இதுகுறித்த சேதவிவரங்கள் எவையும் நேற்று மாலை வரை வெளியாகவில்லை. (சி)

## வவுனியா -....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன. பயணிகள் மதவாச்சியில் இறங்கி வேறு பஸ்களில் தமது பயணத்தைத் தொடரலாம் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தென் பகுதிகளில் இருந்து வரும் பஸ்கள் மதாவாச்சியுடன் நிறுத்தப்படுகின்றன. அவற்றில் வரும் பயணிகள் மதவாச்சி சோதனைச் சாவடி வரையில் செல்லும் வவுனியா பஸ்களில் வவுனியாவுக்கான தமது பிரயாணத்தைத் தொடரமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை காரணமாக தென் பகுதிக்கான மக்கள் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பிரயாணம் மேற்கொள்வதற்கு அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவுக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கும் இடையிலான மக்கள் போக்குவரத்துக்குரிய ஒரே மார்க்கமாகிய ஓமந்தைச் சோதனைச் சாவடி கடந்த திங்கட்கிழமை வழமைபோல் திறக்கப்பட்டிருந்த போதிலும் வ்ன்னிப் பிரதேசத்திலிருந்து எவரையும் வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்குரிய அனுமதியை படைத்தரப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து வன்னிப் பகுதிக்குச் செல்பவர்கள் தமது பயணத்தை மேற்கொள்வதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறை குறித்து எந்தவிதமான முன்னறிவித்தலும் படையினரால் வழங்கப்பட்டிருக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

(சி)

## மரண அறிவித்தல்

### வெலிச்சோர் ஜேசுதாஸன்

(பன்னை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாச முன்னாள் காசாளர்)

மட்டுவில் வடக்கு வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த வெலிச்சோர் ஜேசுதாஸன் நேற்று (04.02.2008) திங்கள் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி வெலிச்சோர் எலிசபெத் தம்பதியினரின் மகனும் வெலிச்சோர்அல்பிரட்டின் சகோதரனும் மேரிவனஜாவின் கணவரும் பார்த்தீபனின் (சாந்திகம்) தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், இன்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் லூர்த்து அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக லூர்த்து அன்னை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைத்தியசாலை வீதி,*
*மட்டுவில் வடக்கு.*

தகவல்:
பார்த்தீபன் (மகன்)

பெப்ரவரி 9 சனி
கிளை திறுவனம்
DMI
காலை 8 மணி
154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம்.
A/L Day, 2008, 2009, 2010 (கலை வர்த்தகப் பிரிவுகள்)
பாடங்களைத் தாங்கிவருவோர்

| | | | |
|---|---|---|---|
| B.S. பசில் (B.St.) | பத்மன் | (His.) |
| S.S. சிறி (Eco.) | இளங்கோ | (P/S.) |
| சந்திரசேகர் (Tam.) | கனகேஸ்வரன் | (Dra.) |
| ஜோதீஸ்வரன் (H/C.) | தேவராஜா | (Chr.) |
| விஜயகுமார் (H/C.) | தவசேகர் | (IQ) |
| மோகன் (Log.) | சுதர்சன் | (Eng.) |
| பாபு[illegible] | [illegible] | [illegible] |

Sam

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org